# சிந்தனை முத்துக்கள்...



வெளியீடு:-

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

குருபூர்ணிமா அன்று வெளியிடப்பட்டது

28-07-1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணக்கத்திற்குரிய

**ஸ்ரீமத் சுவாமி ரங்கநாத்தானந்தர் மகராஜ்**

(ஸ்ரீராமகிருஷ்ண மடம், மிஷனின் தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்மலரை எமது வணக்கத்திற்குரிய

**சுவாமி வீரேஸ்வரானந்தர் மகராஜ்**

அவர்களின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடமிருந்து வலம்

**ஸ்ரீமத்சுவாமி அஜராத்மானந்தர் மகராஜ்**
(ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு)

**ஸ்ரீமத்சுவாமி விருபாக்ஷானந்தர் மகராஜ்**
(செயலாளர் ராமகிருஷ்ண மிஷன் செங்கல்பட்டு)

**ஸ்ரீமத்சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ்**
(உபதலைவர் ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கிளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம் வழங்கிய

# ஆசிச்செய்தி

கல்விசார் பெருந்தகையீர்,

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தின் வெளியீடாக சிந்தனைமுத்துக்கள் என்ற நூல் வெளிவருவதையிட்டு மனமகிழ்வடைகின்றோம். அறியாமை என்னும் இருளில் அகப்பட்டு அல்லலுறும் ஆத்மாவை மீட்டெடுப்பது அறிவு நூல்கள் ஆகும். ஆயிரம் ஆயிரம் நூல்கள் வெளிவந்தாலும் மனித இனம் பயன்படுத்துவது சிலவற்றையே. வளைவான ஒரு பொருளை நேர்படுத்த வேண்டுமாயின் நூலின் மூலமாக நேராக்கப்படுவது அந்நூல் எழுத்து வடிவில் தாங்கி வருவதை புத்தகம் என்று சொல்லுவோம். சிந்தனையில் ஊறி மனத்தின் மூலமாக மனிதனை தொழில்பட செய்வது அந்நூலில் உள்ள கருத்துக்கள் இக் கருத்துக்களை இம் மண்ணில் வாழ்ந்த சான்றோர்கள் தத்துள்ளனர். அவ்வரிசையில் நல்லை நகர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும், பருத்தித்துறை புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களும் தமிழ்நாடு தந்த டாக்டர் வை. இரத்தினசபாபதி ஆகிய மூவரது சிந்தனையையும் முத்துக்களாக்கி வெளியாகும் இந் நூல் இம்மண்ணில் வாழும் மக்களுக்கு பெரும் விருந்தாக அமைந்துள்ளது. மக்கள் யாவரும் பயன் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வீர்களாக. நூலை வெளியிடும் சாரதா சேவாச்சிரமத்தினுடைய பணிகளை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MINISTERS' MESSAGE

# *Our Religion is Based On Verifiable Truths!*

**The unshakeable Power of Hinduism is the experiential reality of the soul s divinity**

BY SWAMI RANGANATHANANDA MAHARAJI

THE SANATANA DHARMA IS MAINLY THE PRODUCT of an extraordinary literature, the ten or twelve Upanishads, composed over 4,000 years, in which you find a scientific and experiential approach to religion. Religions of the world are generally based on unquestionable dogmas and creeds, but Sanatana Dharma is based on verified and verifiable truths of human nature, supersensory, but not supernatural. The supernatural has no place in Vedanta or Sanatana Dharma, because its concept of nature is very wide, including the the Self or subject of knowledge along with sensory objects of knowledge. About the love of truth experienced by the sages of the Upanishads, Prof. Max Muller says, " If it seems strange to you that the old Indian philosophers should have known more about the soul than Greek or modern philosophers, let us remember that however much the telescopes for observing the stars of heaven have been improved the observatories of the soul have

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

remained much the same" (Three Lectures on the Vedanta Philosophy, London, 1894 p. 7) He went on to say 'It is surely astounding that such a system as the Vedanta should have been slowly elaborated by the indefatigable and intrepid thinkers of India thousands of yaers ago. a system that even now makes us feel giddy, as in mounting the last steps of the swaying spire of a Gothic cathedral. None of our philosophers, not excepting Heraclitus Plato. Kant or Hegel, has ventured to erect such a spire, never frightened by stroms or lightning. Stone follows on stone after regular succession after once the first step has been made, after once it has been clearly seen that in the beginning there can have been but One, as there will be but One in the end whether we call it *Atman* or Brahman"

The *Bhagavad Gita* speaks of Nature or Prakriti, as two-fold: one *apara* 'ordinary' which is studied by physical sciences today, and the other *para* which modern Western science has neglected, consisting of the spiritual principle of intelligence or consciousness. In a statement of the *Gita*, verse 6, chapter 7, Sankaracharya comments, " Sri Krishna, the Divine Incarnation, says, 'I am the cause of this whole universe, through my two-fold Prakriti or nature.' Lower nature is composed of sensory data, which are constantly changing. The

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

higher nature, namely, intelligence or consciousness, is the reality above the sensory level." The sages discovered through investigation the Changeless behind the changing, the Immortal behind the mortal. That discovery, and the scientific technique employed for it, is expressed in one verse, the opening verse of the fourth chapter of the Katha Upanishad: "The self - Existent Lord created the sense organs (including the mind) with the defect of an out - going disposition; therefore (man) perceives (things) outwardly, but not the inward Self. A certain dhira (wise man) desirous of immortality, turned his senses (including the mind) inward and realized the inner Self"

Modern science has become aware of the influence of the datum of the observer on the knowledge of the observed data. If the Self as knower is inextricably involved in the knowledge of the not–self of the known, an inquiry into the nature of the self and the nature to knowledge becomes not only a valid but an indispensable and integral part of the scientific investigation in to the nature of reality. The rishis who revealed the Upanishads were thus far in advance of human thought when they decided to dedicate themselves to tackling the inner world. By their emphasis on inner penetration, by their whole-hearted advocacy of what the Greeks centuries later promulgated

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in the dictum, "man, know thyself," but at which they themselves stopped half-way, the Upanishads not only gave a permanent orientation to Indian culture and thought, but also blazed a trail for subsequent philosophy in East and West.

This realization of the immortal Atman by one sage was re-experienced by other sages, and a thousand years later, by Bhagavan Buddha, and in our times by sages like Sri Ramakrishna, Holy Mother Sarada Devi and Swami Vivekananda. The Upanishads present religion as a matter of experience of the highest truth, and not as mere. "Knowledge of Brahman consummates in the experience of Brahman'" says Sankaracharya in his Brahma Sutra commentary. This is the supreme characteristic of Sanatana Dharma. Vedanta teaches the scientific–philosophical approach to the highest Reality. That approach is shown by Vedanta in its allowing and welcoming questioning by seekers. No dogmas can allow or stand questioning. Trnth alone can do it. This idea has been expressed clearly in the Vedas, " This Atman (being) hidden in all beings is not manifest (to all). But (It) can be realized by all who are accustomed to inquire into subtle truths by means of their sharp and subtte reason" (Katha Upanishad, 3.12).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் சாதனை புரிந்த **சதாவதானி**
**மேலைப் புலோலி.**

# நா. கதிரைவேற்பிள்ளை

கலை, மதம்ரீதியாகத் தமிழ் நாட்டுடனான எம் நாட்டுக் கலைஞானிகளின் தொடர்பு முதற் சங்க காலத்தில் முரஞ்சியூர் முடிநாகனாருடனும் கடைச்சங்க காலத்தில் ஈழத்துப் பூதந்தேவனாருடனும் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வரிசையில் மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளையின் பெயர் கடந்த நூற்றாண்டில்மங்காப்புகழ் சேர்த்த கலைஞானிகளுள் முக்கிய இடம்வகிக்கின்றது.

மேலைப்புலோலியில் வசித்த நாகப்பிள்ளை தம்பதியினருக்குத் தமிழ் பஞ்சாங்கப்படி பிரசோற்பதி வருடம் மார்கழித் திங்கள் 3ம் நாள் (18-12-1871) ஆண் குழந்தை பிறந்தது. தெய்வத் திருவருளால் பிறந்த அக்குழந்தைக்கு கதிரைவேற்பிள்ளை என்ற கவிநாமஞ்சூட்டி பாசத்துடன் வளர்க்கலாயினர்.

ஆரம்பக் கல்வியை புலோலியிலுள்ள பாடசாலை ஒன்றில் மேற்கொண்ட போதே கதிரைவேற்பிள்ளை மகாவிவேகியாகவும், கல்வி கற்பதில் தளராத விருப்பும் அளப்பரிய ஆற்றலுமுள்ளவராகத் திகழ்ந்தார். தொடர்ந்து மேல் நிலைக் கல்வி கற்கப்போதுமான நிதி கற்கை வளம்இன்மையாலும் தமிழ் மொழியில் செறிந்து காணப்பட்ட தொன்மை இலக்கண இலக்கியங்களை நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றறிய வேண்டும் என்ற பேரவாவினாலும் உந்தப்பட்டபிள்ளை அவர்கள் தனது எண்ணத்தை நிறைவேற்றும் முகமாக 1893 ஆம் ஆண்டு தனது 22 ஆவது வயதில் தமிழ் நாடு பயணமானார்.

தமிழ் நாட்டில் அக்காலத்தில் தலை சிறந்த கல்விமானாகத்திகழ்ந்த தி.க.கனகசுந்தரம்பிள்ளை இவரின் குருவாக வாய்த்தமை இவர் செய்தபூர்வீக புண்ணிய பயனாலன்றோ. தொடர்ச்சியாகவேறு பல பிரபல்ய வித்துவான்களிடமும் சங்க இலக்கியம் முதலான அருங்கலை நூல்களையும் ஐம் பெருங்காப்பியம்களையும் ஐயந்திரிபறக் கற்றதன் பயனால் எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் விரைவில் சிறத்த விற்பன்னராகத் திகழ்ந்தார். வடமொழியிலும் ஆழ்ந்த புலமை எய்தியமை செந்தமிழ் இலக்கணத்தையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் நுணுகி ஆராயும் வல்லமை பெற அவருக்குப் பெரிதும் உதவியது.

1897 ஆம் ஆண்டு உயர்தரப் பள்ளி ஒன்றில் ஆசிரியராக நியமனம் பெற்ற பிள்ளை அவர்கள் தமது ஓய்வு நேரங்களைப் பிறருக்குப் பயனுள்ள வாறு தணிகைப் புராணம், கந்தப்புராணம் போன்ற அரிய மெய்நூல்களையும் சிவாகம முறைகளையும், சைவசமய தத்துவ விளக்கங்களையும் சாத்திரதோத்திர பேரறிவையும் ஆங்காங்கு பிரசங்க வாயிலாக மக்களுக்குப் போதிக்கும் கைங்கரியத்தில் ஈடுபடலானர். இப்பிரசங்கங்களில் மாயாவாதத்திற்கு எதிர்ராக உண்மைச் சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தை நிலைநாட்டி வெற்றியீட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார். இவ்வரிய சீரிய தொண்டினைப் பாராட்டும் முகமாக "மாயாவாத தும்சகோளரி" என்னும் அரிய கௌரவ விருது அவருக்கு வழங்கப்பட்டது.

பிள்ளை அவர்கள் இவ்வாறாக யாத்திரைகள் மேற்கொண்டு பல திருத்தலங்களைத் தரிசித்துச் செய்த பிரசங்கங்கள் மக்களிடை சைவநற் சிந்தனைகளையும் சைவ நல்லொழுக்கங்களையும் வளர்க்க மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. இவ்வாறாக அயராத உழைப்பினாலும் ஒப்புயர்வற்ற ஆற்றலினாலும் தயாள சிந்தையாலும் ஏனைய ஆன்றோர் பிரமிக்கும் வண்ணம் ஈழத்தில் பிறந்த பிள்ளை அவர்கள் நாட்டில் தலைசிறந்த கலைஞானிகளுள் ஒருவராக இக் குறுகிய காலத்துள் பிரகாசிக்கலானார்.

அவருடைய அளப்பரிய புலமையைப்பாராட்டும் முகமாகவும் தமிழ் மொழிக்கும் சைவசமயத்துக்கும் ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளைப் போற்றும் முகமாகவும் சைவசித்தாந்த மகாசரபம் அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், மகாவித்துவான், நாவலர் செந்தமிழ்ச்செம்மல், பெருஞ்சொற் கொண்டல் போன்ற பல பட்டங்கள் அவருக்கு வழங்கப்பட்டன. படிப்படியாகப்பிள்ளை அவர்களின் புகழ் தமிழ் நாடெங்கணும் வியாபிக்கலாயிற்று.

இக்கால கட்டத்தில் ஆரணி அரச சமஸ்தான வித்துவானாக அவர் நியமனம் பெற்றமையும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராக அமர்ந்

தனமையும் அவருக்கு மாத்திரமன்றி ஈழத்துக்கும் குறிப்பாக அவர் பிறந்த புலோலி நகருக்கும் அழியாத மகோன்னத புகழை ஈட்டிக் கொடுத்தது. எப். ஏ.; பி. ஏ. வகுப்புகட்கு சோதனை கர்த்தராகத் துலங்கியமை அருடைய புகழின் உச்சக்கட்டமெனக் கூறினால் அதுமிகையாகாது.

பௌத்த மதத்தவர்கள் சிலர் சைவசமயத்தை எள்ளிநகையாடியதை அறிந்து, புத்தமத கண்டன மென்னும் ஓர் நூலை ஆக்கி ஆறு தினங்களில் அச்சேற்றி, அரங்கேற்றி புத்த மதத்தில் தத்துவ மின்மையை விளங்கினார். காராளரை வைசியர் என்று நிகண்டு கூறுகின்றபோதிலும் அவர்களை நான்காம் வருணத்தாரென்று ஆறுமுகநாவலர் குறிப்பிட்டுள்ளதைக் கண்டித்தவர்கள் வெட்கித் தலை குனியும் வண்ணம் வடமொழி, தென்மொழி பிறமொழிகளிலும் வல்ல சங்கப் புலவர்கள். ஏங்கி நிற்க நாவலர் பெருமானின் கூற்றின் உண்மையை நிரூபித்து சுமார் ஆறு மணித்தியாலம் உபந்நியாசஞ்செய்தார்.

1907 ஆம் ஆண்டு சென்னையில் பிள்ளை அவர்கள் சதாவதானஞ் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ ஞானானந்தசுவாமிகள் தலைமை வகித்த அம்மகாசபைக்கு கற்றறிந்த மேதாவிகள் அவதானப் பரீட்சைக்காக ஏற்பாடாயினர். அவ்வித்துவ மணிகள் பொறித்த வினாக்களனைத்துக்கும் ''வேலும்மயிலும் துணை, வேலும்மயிலும் துணை'' என்னும் திருநாமத்தை முழக்கிக் கொண்டு தளராது தகுந்த விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களளித்து சபையோர் வியக்கும் வண்ணம் ''சதாவதானி'' என்னும் விருது பெற்றார்.

தமிழ்ப்பேரகராதி, சிவசேத்திராலயமகோற்சவ விளக்கம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு ஆகிய நூல்கள் அவரால் ஆக்கப்பட்டவைகளாகும். பழநித்தலபுராணம், திருவருணைக்கலம்பகம், சிவராத்திரி புராணம், கூர்மபுராணம், நைடதம் ஆகிய நூல்களுக்கு விருத்தியுரை எழுதியுள்ளார்.

இத்தனை சிறப்புடன் இல்லறம் நடத்திய பெருந்தகை. 1907 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சென்னையில் இறையடி சேர்ந்தார்.

இச்சான்றோனின் நினைவுச் சின்னமாக அன்னாரின் திருவுருவச்சிலை, மன்று, வீதி ஆகியன அப்பகுதிப் பெருங்குடி மக்களால் நிறுவப்பட்டு ஆராதனை செய்யப்பட்டு வருகின்றன.

புலோலி வே. ஆறுமுகம்

நன்றி: தினக்குரல் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவி

துறவியானவன் எல்லாப் பற்றுக்களையும் முற்றும் துறந்தவன். துறவி காஷாய வஸ்திரமே யன்றி வேறு வஸ்திரந்தரிக்கலாகாது. அவனுக்குத் தண்டகமண்டலங்களும் இருத்தல் வேண்டும். பிதா, மாதா, பெண்டிர், பிள்ளை முதலாயோரி டத்தும் பொருள் முதலானவைகளிடத்தும் பற்றில் லாதவனே காஷாயந் தரித்தல் வேண்டும். பற்று உள்ளவன் காஷாயந்தரித்தால், ரௌரவ நரகத் திலே கிடந்தழுந்துவன். இல்லறத்தின் வழுவினால் அவ்வழு, பிராயச் சித்தத்தினாலே நீங்கும். துற வறத்தின் வழுவினால் அவ்வழு அவனை நரகத்திற் செலுத்துவதன்றி பிராயச்சித்தத்தினாலேநீங்காது. துறவறத்தில் வழுவுதல் மலைச்சிகரத்தினின்று தவறி விழுதல் போலும்.

துறவி சற்குருவை வழிபட்டு, ஞான சாஸ் திரங்களை ஓதி, அவற்றின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, நிட்டை கூடல் வேண்டும் தன்னை அடைந்த பரிபக்குவர்களுக்கு அவைகளை ஓதுவித்து, அவைகளின் பொருளைப் போதிப்பித் தல் வேண்டும்.

துறவி ஒருவரையும் பகைத்தலாகாது, அநித்தியமாயும் உரோகத்துக்கு இருப்பிடமாயும் உள்ள சரீரத்தின் பொருட்டு ஒருவரோடும் கோபிக்கலாகாது. தம்மவரென்றும் பிறரென்றும் விருப்புவெறுப்பும் வைக்கலாகாது எல்லாவுயிர் களிடத்தும் கருணையுடையவனாய் இருத்தல் வேண் டும். நடக்கும் போது தரையிலே யாதொரு ஐந் துவும் இல்லாதிருக்கப் பார்த்து அடிவைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தண்ணீரை நன்றாக வஸ்திரத்தினாலே வடித்துச் சுத்தி செய்து குடித்தல் வேண்டும். தன்னை ஒருவன் வைதாலும் அடித்தாலும் மற்ற எவ்வகைத் துன்பம் செய்தாலும், அவன் மேல் வெறுப்புக் கொள்ளாமல், இனிய வார்த்தைகளையே பேசல் வேண்டும் தனக்குப் பிறர் செய்யும் அவமானத்தை அமிர்தமாகவும் வழிபாட்டை விஷமாகவும் கொள்ளல் வேண்டும். வெய்யில், காற்று முதலானவைகளுக்கும், சரீரத்தில் வரும் துன்பங்களுக்கும், சிறிதும் அஞ்சாமல் அவைகளைச்சகித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் இருத்தல் வேண்டும். உயிரோடு இருத்தலையும் இறத்தலையும் சமமாகவே எண்ணல் வேண்டும்.

துறவி தாம்பூலம், சந்தனம், பூமாலை, ஆபரணம் முதலிய போக்கியப் பொருள்களை அநுபவித்தலும், கீதங் கேட்டலும், கூத்துப்பார்த்லும், பெண்களை இச்சித்தலும், அவர்களோடு பேசுதலும், அவர்கள் கூட்டத்திற் போதலும் கோயிலதிகாரஞ் செய்தலும், அரசர் வாயிலிற் செல்லுதலும், கழுத்தின் மேலன்றி கழுத்தின் கீழேயும் க்ஷௌரஞ் செய்து கொள்ளலும் காஷாய வஸ்திரத்தை முழங்கால்களின் மேலன்றி முழங்கால்களின் கீழே தொங்குபடி உடுத்தலும் ஆகாவாம்.

துறவி வலக்கையிலே பிக்ஷா பாத்திரத்தையும் இடக்கையிலே தண்டத்தையும், தரித்துக் கொண்டு, நற்குடிப்பும், நல்லறிவும், நல்லொழுக்கமும், ஈசுர பத்தியுமுடைய கிருகத்தர்கள் வீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலே மௌனத்தோடு போய், பிக்ஷை வாங்கி, ஒரு பொழுது உண்ணல் வேண்டும். தரித்திரரிடத்தே செல்லலாகாது. பிக்ஷையின் பொருட்டு யாரை யேனும் நெருங்கலாகாது. பிக்ஷைக்குப் போனால் முற்றத்திலே தன்னிரண்டு கண்களையும் வலக்காற் பெருவிரலில் வைத்துக் கொண்டு நின்று பிக்ஷை யேற்றல் வேண்டும். பிக்ஷையின் பொருட்டு ஒரு பசு கறக்கும் நேரம் மட்டும் நிற்றல் வேண்டும். அவ் வளவும் பிக்ஷை வாராதொழியின் மற்றை வீட்டிற் குச் செல்லல் வேண்டும். செல்லும் பொழுது பிக்ஷையிடக் கொண்டு வந்தவர் அழைக்கின், அவ் விடத்திற்றானே நின்று கொண்டு வாங்கல் வேண் டும் திரும்பிப் போய்வாங்கலாகாது. பிக்ஷை கிடைத்த போது சந்தோஷித்தலும், கிடையாத போது துக்கித்தலும் ஆகாவாம். விஷயங்களால் இழுக்கப் படுகின்ற இந்திரியங்களை, அற்ப போச னத்தினாலும் ஏகாந்தத்தில் வசித்தலினாலும், நல்வழியில் திருப்பல் வேண்டும். குறிசொல்லல், வைத்தியம், சோதிடம், மந்திரவாதம் முதலிய வைகளினாலே பிக்ஷை சம்பாதிக்கலாகாது.

பிக்ஷை சாந்தானிக பிக்ஷையும், கணபிக்ஷை யும், மாதுகரி பிக்ஷையும், அயாசித பிக்ஷையு மென நான்கு வகைப்படும். ஆசாரியர் முதலாயினோர், பக்தர்களாயினும், சீடர்களாயினும் அன்பினோடு தாமே தரும மடம் விளைநிலம் முதலியவை களைச் சந்தான பரம்பரையாக அனுபவிக்கும் படி வாங்குவது சாந்தானிக பிக்ஷை. இல்வாழ் வாருடைய தெருவிலே புறப்பட்டு வீடு தோறும் அரிசி வாங்குவது கண பிக்ஷை. வண்டாவது ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவிலிருந்து அதனை வாதியாமல் பல பூக்களி னுஞ் சென்று சிறுகச் சிறுக தேனைக் கிரகித்தல் போல, விரத்தனானவன் ஒருவரை வாதியாமல் பலரிடத்தும் சென்று சிறுகச் சிறுக அன்னம் வாங்குவது மாதுகரி பிக்ஷை, தனக்கென்று காசையும் பணத்தையும் தானியத்தையும் தீண்டாதவனுக்கே இந்த மாதுகரி பிக்ஷை பண்ணுதல் தகும். மத்தியானமாவதற்கு முன்னே மாதுகரி பிக்ஷக்குப் புறப்படலாகாது. விரக்தியின் முதிர்ச்சியினாலே "நமக்குள்ள பிராரதத்தை நாம் எங்கேயிருப்பினும் கடவுள் புசிப்பர்" என்று துணிந்து தாம் இருந்த விடத்திலே தானே ஒருவன் தானாகக் கொண்டு வந்து தந்ததை வாங்கிப் புசிப்பது அயாசித பிக்ஷை.

ஈசுரநிந்தகர், குருநிந்தகர், வேதநிந்தகர், ஆகமநிந்தகர், தேவத் திரவியங்கவர்வோர், சமய ஆசாரமில்லாதோர், கொலைஞர், கள்வர், கள்ளுண்போர், புலாலுண்போர் பிறன்மனை நயப்போர், பொய்ச்சான்று சொல்வோர் பொய்வழக்குப்பேசுவோர் கன்னிகையை விற்போர். இழிந்த வருணத்தார் முதலானோரிடத்து பிக்ஷை வாங்கலாகாது. இவர்களுடைய அன்னத்தைப் பூசித்தவர்களுக்கு ஒரு போதும் சித்தசுத்தி பிறவாது. அதனால் அவர்கள் மேன் மேலும் பாவங்களையே செய்து நரகத் துன்பத்தை அநுபவிப்பார்கள். அழுக்குப் புடவையுடுத்தவள், கருப்பிணி, வெள்ளாட்டி. நற்குணமில்லாதவள், எண்ணையிட்டுக் கொண்டவள், தாம்பூலந் தின்றவள், கணவனுக்கு முன்னுண்பவள், அருவருப்பானவள், உறுப்புக்குறைந்தவள், கருங்குட்ட முதலிய நோயு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையவள், விதிப்படி சௌச முதலியன செய்யாதவள். சனனமரணா சௌசமுடையவள், முதலியோர் இடும் அன்னம் வாங்கலாகாது. தீஷையில்லாதவருடைய அன்னம் தீஷையுடையவர் புசிக்கலாகாது.

சந்நியாச வேடம் தரித்துக் கொண்டு மண், பொன், பெண்களில் இச்சை வைப்பவர்களும் கோயிலதிகாரஞ் செய்யப்புகுந்து வேதத்திரவியங்களை உபயோகிப்பவர்களும் பதிதராவார்கள். அவர்கள் இருபத்தெட்டுக் கோடி நரகங்களிலும் கற்பகாலம் கிடந்தழுந்துவார்கள். அவர்கள் அனுபவிக்கும் நரக துன்பங்களை சொல்ல முடியாது. அவர்கள் எண்ணில்லாத தரம் மலப்புழுவாய்ப் பிறந்து பிறந்து மலத்தை உண்டிறப்பார்கள். இப்பிறவியினும், மேல்வரும் பிறவிகளிலும், சுகசன்னி, பிரமேகம், கிரந்தி, பசுந்தரம், அரையாப்பு, நீரடைப்பு, கிரகணி, நீரிழிவு, மூலரோகம், பிளவை, பெருவியாதி, குட்டம், க்ஷயம், மகாசுவாசம், குன்மம் முதலிய எண்ணில்லாத வியாதிகளினாலே வருந்துவர்கள். அப்பதிதர்களை வணங்குதலும், அவர்களோடு கூடுதலும், அவர்களோடு பந்திலிருந்து புசித்தலும், அவர்களைத் தீண்டலும், பிறவும் பெரும் பாதங்களாம். ஆதலினாலே நரகத்துன்பத்திற்கும் பிறவித் துன்பத்திற்கும் அஞ்சினவர்கள் அப்பதிதர்களைக்கண்டால் தூரத்திலே நீங்கிவிடக்கடவர்கள்.

பிரமச்சரியம் முதலிய நான்காச்சிரமங்களும் கிருகஸ்தாச்சிரமத்தினாலேயே நிலைபெறுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திர விதிப்படியே அதனதன் கருமங்களை நடத்திவந்தால், இந்த நான்கு ஆச்சிரமங்களும் தனித்தனியே மோக்ஷத்தைக் கொடுக்க வல்லன வாம். நான்காச்சிரமங்களுள்ளும் வேதாகமங்க ளில் விதித்தபடி ஒழுகும் கிருகஸ்தன், மற்றை மூன்று ஆச்சிரமங்களையும் பிக்ஷை கொடுத்துப் பாதுகாத்தலினாலே உயர்ந்தவனென்று சொல்ல படுகின்றான். நதியும் நதமும் சமுத்திரத்தைச் சேர்தல் போலவே பிரமசாரியும் வானப்பிரஸ்த னும் சந்நியாசியும் கிருகஸ்தனையே பிக்ஷையின் பொருட்டுச் சேர்க்கின்றார்கள். நதியென்பது கிழக்கு முகமாக ஓடும் ஆறு. நதமென்பது மேற்கு முகமாக ஓடும் ஆறு.

தேவர் கடனை யஞ்ஞத்தினாலும், முனிவர் கடனை வேதாத்தியானத்தினாலும், பிதிர்க் கடனைப் புதல்வரைப் பெறுதலினாலும் தீர்த்துக் கொண்டே சந்நியாசத்தில் பிரவேசித்தல்வேண்டும் பிரமசாரியத்திலிருந்து கிருகஸ்தாச்சிரமத்தையும் அதிலிருந்து வானப்பிரஸ்தாச்சிரமத்தையும் அதில் இருந்து சந்நியாசத்தையும் அடைவதே தகுதி யாயினும், கிருகஸ்தாச்சிரமத்திற்கு உரிய சக்தியில் லாதவரும், பிரபஞ்சத்திலே மிக்க வைராக்கிய முடையவரும் விரும்பிய போது சந்நியாசம் பெறலாம்.

துறவு நிலை பெற்றவர், குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்ளுதல் போலக் கூடா. ஒழுக்கம் பூண்டு பழி பாவங்களை அடையாமல் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமெல்லாம் ஜெபம், தியானம், பூசை, ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல், என்பவைகளிலே போக்கல் வேண்டும். இவை செய்யாதவருடைய சந்நியாச வேடம் சிறிதும் பயன் படாது.

நன்றி: சிவதொண்டன் — ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

இதழ்: 09 - 11, 12

* * * * * *

# நாம் என்றும் உள்ளோம்

உலகம் தோன்றிய காலத்தையும் உலகம் முடிவடையும் காலத்தையும் பற்றி எவரும் திட்டவட்டமாக கூற முடியாது. உலகத்திலுள்ள பஞ்சபூதங்களின் அளவை மனிதன் அணுவளவாயினும் கூட்டவோ குறைக்கவோ முடியாது. மனிதன் கண்டுகொண்டாலும் நவீன மின்சாரம், அணுசக்தி யாவும் முன்பு அறியப்படாது இருந்தவையன்றிப் புதிதாக உண்டாக்கப்பட்டவையல்ல. இவை போன்று இன்னும் எத்தனையோ அறியப் படாத அற்புத சக்திகள் அகில அண்டத்திலும் உள. காலத்திற்குக் காலம் மனிதனின் கற்பனா சக்தியால் புதுப்புது வடிவமான பொருள்களைச் செய்யமுடியுமேயன்றி எப்பொருளுக்கும் மூலப் பொருளாக இருக்கும் பஞ்சபூதங்கள் எள்ளளவேனும் கூடுவதுமில்லை, குறைவதுமில்லை. கூட்டவும் முடியாது குறைக்கவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால விஞ்ஞானிகள் எல்லாரும் இதனை ஏக மனதாக ஒத்துக் கொள்கின்றனர். உதாரணமாக ஒரு தங்கப்பவுணில் பழைய காலத்தில் ஒரு சோடிக் காப்புச் செய்வார்கள். தற்காலத்தில் பெண்ணுக்கு வேண்டிய பல தினுசான நகைகள் செய்து விடுவார்கள். வடிவங்களிலும், பருமன்களிலும் மாற்றமடைந்த போதிலும் தங்கப் பவுண் ஒரு தங்கப் பவுண் தானே. சமய நூலோர் இதனையே சத்காரியவாதம் எனக் கூறுவர்.

அஃதாவது உள்ளது இல்லாமற் போவதுமில்லை. இல்லாதது உள்ளதாவதுமில்லை என்பரே பகவத்கீதையிலும் பகவான் அருச்சுனனுக்குப் போதிக்கும் போது ஒரு இடத்தில் இதனையே கூறுகின்றார். "நிலையில்லாப் பொருள் நிலைத்திருக்காது. நிலையுள்ள பொருளுக்கு நாசமில்லை (கீதை அத் 2, வ, 16) உரையாடும் போதும் எழுதும் போதும் நாம் என்று கூறுகின்றோம். இந்த நாம் என்பது யார்? அல்லது எது? உயிரைப் பிரிந்த பின் அசையாது கிடக்கும் உடலை 'நாம்' என்று கூற எவரும் துணிபார். நித்திரை செய்யும் போது அறிவற்றுக் கிடக்கும் மனத்தை "நாம்" என்று கூறவும் நுண்ணறிவுடையோர் ஒருப்படார். பிராணவாயுவெனினும் பொருந்தாது. ஏனெனின் தூங்கும் போது இது அறிவதில்லையே. ஆகவே 'நாம்' என்று கூறும் பொருள் ஐந்து புலனுமல்ல, ஐம்பூதமுமல்ல, அந்தக் கரணமுமல்ல முக்குணமுமல்ல, இந்த உடலுமல்ல.

இது அல்ல, இது அல்ல என்று நேதிமுறையாகக் கூறலாமே அன்றி இது இப்படிப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவினது றன்ன இயம்ப எவராலும் முடியாது. அப்படியாயின் இது சூன்யமான ஒன்றாகுமோ என ஐயப்படலாம். இவ்வையத்துக்கு இடமேயில்லை. ஏனெனில் இது அல்ல இது அல்ல என்று அறிந்து கொள்ளும் ஆற்றலை உடையது எப்படிச் சூனியமாகும்.

ஆகவே நாம் உள்ளோம் என்பது துணிபாகும். முன்பு கூறிய சத்காரிய வாதப்படி இன்றைக்குள்ள ஒன்று முன்பும் இருந்தே இருக்க வேண்டும் இடையீட்டு வந்ததல்ல பின்பும் இருந்தே தீரும் இடையிலே அழிவதுமல்ல. இதனையே அப்பரும் ''இடைக்கலமல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்'' என்றும் ''என்று நீ அன்று நான் உனது அடிமையல்லோ'' என்று இன்னொரு பெரியாரும் கூறுப்போந்தனர். ஆகவே ''நாம் என்றுமுள்ளோம்'' என்பது ஆப்தர் மொழியல்லவா!

இவ்வுண்மையைச் சதா நினைந்து கொண்டு உலகில் வாழ்பவர்களே ஞானிகள். இதையறியாது கடுதாசிகளில் வரும் யோட்டோப் படங்களை உண்மை மனிதர் என்று எண்ணுவார் போன்று பிறவிதோறும் அழிந்துபோகும் உடலையே 'நாம்' என்று மருள்கின்றோம். இதனால் இப்பிறவியிலேயே ஏதோ எல்லாம் செய்து முடிக்கப் போவதாக அகந்தையும் இழந்து விடப்போவதாக அச்சமும் கொண்டு ஏழை நெஞ்சு புண்ணாக எண்ணி எண்ணி எங்களைச் சிறுப்பித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் தன் வேகத்தைக் கூட்டுவதுமில்லை, குறைப்பதுமில்லை! ஓய்ந்திருட்டதுமில்லை. தன் கடமையைத் தவறாது செய்து கொண்டிருக்கிறது. ஏனெனில் அது என்றுமுளதாயிற்றே. அவ்வண்ணமே என்றுமுள்ள நாம் எதனையும் இழந்து விடுவதுமில்லை. பெற்றுக் கொள்ளப் போவதுமில்லை. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.

# சொற் பொருட் சுவை சேர் சூடாலை சரிதம்

சூடாலை சரிதம் ஞானவாசிட்டம் என்னும் நூலிலுள்ள ஒரு கதையாகும். ஞானவாசிட்டம் வசிட்ட முனிவரது மெய்ஞ்ஞான உபதேசத்தைப் பொருளாகவுடையது. இராமபிரான் குலகுருவாகிய வசிட்ட முனிவரிடம் பிரம்ம வித்தை பற்றிய ஐயங்களை வினவ அவற்றைத் தெளிவுறுத்தும் வகையில் வசிட்ட முனிவர் கூறிய உபதேசம் உரையாடல் வடிவில் அமைந்துள்ளது உபநிடதம் கூறும் மறை ஞானத்தை உபகதை மூலம் விளங்க படுத்தியிருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும் ஞானவாசிட்டத்திலுள்ள இச் சூடாலை சரிதத்தை எங்கள் சுவாமிகள் சொற்பொருட் சுவைசேர் சூடாலை சரிதம் எனக் கொண்டாடினர் சுவையான கதையூடே ஆழ்ந்த பொருளைச் சொல்லு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் சுவாமிகள் இவ்வாறு சிறப்பித்துக் கூறினர். இக்கதையை இங்கு சுருக்கமாகத் தருகிறோம்.

சிகித்துவசன் ஓர் அரசன். சூடாலை பட்டத்து அரசி. இருவரும் நற்குண நற்செயல்களினால் மாண்பு பெற்றவர்கள். தமக்கு வாய்த்த இராச போக வாழ்க்கையிலே உலக சுகங்களைப் போதுமளவு அனுபவித்தனர். ஆனால் கானல் நீரால் தாகம் தணியுமோ? அவர்களுக்கு இவ் உலக சுகங்களால் நிறைவு கிடைக்கவில்லை. ஆதலினாலே ஆன்ம சுகத்தை நாடினர். விவேகமும் திருவருட் பேறும் வாய்ந்த சூடாலை மிக விரைவில் பூரண ஞானம் பெற்று ஆன்ம சுகத்திற் பொருந்தினார். அவரது உடலிலும் அச்சின் மயம் பிரதி பலித்தது. இப்புத்தழகைக் கண்ணுற்று வியந்த அரசன் சூடாலையின் இவ்வற்புத அழகை வியந்து பாராட்டினான். சூடாலை இவ்வழகின் இரகசியத்தைக் கூறினார். ஆனால் அரசன் 'பெண் புத்தி' என்றோர் மயக்கத்திற்கு இன்னமும் ஆட்பட்டிருந்தான். சூடாலை சொன்ன ஞான எழிலையும், அதன் வழியையும் அவன் நம்பவில்லை. தானம், தர்மம், தீர்த்தம், யாத்திரை செபம், வழிபாடு ஆகியவற்றிலேயே முயன்றான் இவற்றால் எல்லாம் அவன் நாடித் தேடிய ஆன்ம சுகம் வாய்க்கவில்லை. அவன் பெருங்கவலை அடைந்தான். ஒரு நாள் சூடாலையிடம் தன் கவலையைத் தெரிவித்துத் தான் இந்த அரச வாழ்வைத் துறந்து காட்டிற் சென்று தவம் செய்யப் போவதாகக் கூறினான். சூடாலையே அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தை ஏற்க வேண்டும். எனவும் இரந்தான். அரசனை அவன் வழியிலேயே விட்டு விட வேண்டும் எனச் சூடாலைக்குத் தோன்றியது. ஆதலினால் அரசனது வேண்டுதலுக்குச் சூடாலை இணங்கினார்.

அரசன் அடர்ந்த காட்டுப்பகுதிக்குத் தவம் செய்யச் சென்றான். பதினெட்டு ஆண்டுகள் கழிந்தன. அவனைப் பார்க்க வரும் பொருட்டு யோக சித்தி மூலம் சூடாலை சென்றனர் அடர்ந்த கானகத்தில் உடல் வற்றித் துரும்பொத்திருக்கும் ஓர் உருவாக அரசனைக் கண்டனர். அவருக்கு அரசனிடத்தே மிக்க பரிவு பெருகியது. அது அரசனது பக்குவ காலமாகவும் இருந்தது. ஆதலால் அரசனுக்கு ஞானோபதேசஞ் செய்யத் திருவுளம் பற்றினர் வேண்டுருக் கொள்ளும் ஆற்றலுடைய சூடாலை தன் உருவை ஓர் இளவேதியனாக மாற்றிக் கொண்டு அரசன் முன் தோன்றினார். அரசன் தன்முன் நிற்கும் இளவேதியரை உபசரித்தான். தனது வரலாற்றைக் கூறினான். தான் அனைத்தையும் துறந்தும் இத்தனை காலம் தவம் இயற்றியும் யாதும் பெறவில்லையே என்று கவலை அவனிடம் தெரிந்தது. இளவேதியரைப் பற்றியும் விசாரித்தார். வேதியர் தான் வியாசரது புத்திரனெனவும் கும்பத்தில் தோன்றியமையால் தம்மைக் குப்பமுனியென அழைப்பர் எனவும் கூறினார். பின்னர் ஆன்ம சுகமானது அரசைத் துறத்தலால் அடையக் கூடிய தொன்றன்று. என்பதை எடுத்துரைத்தார். ''நான் எனது அரச அதிகாரத்தைத் துறந்தேன்'' என்பதிலேயே எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அதிகாரம் பற்றிய பற்று ஒளிந்திருக்கிறது. ஆதலால் காட்டில் தவம் முயன்றபோதும் அரச பதம் பற்றிய ஆசை ஒளிந்திருக்கும் எண்ணத்தை வெளிப்படுத்தினர். இப்படியே உடல் வற்றிப் போகுமளவான தவம் ஆகியவற்றாலும் ஞானம் உதியாதெனவும் எடுத்துரைத்தார். அஃது ஞான நிட்டரான ஒரு குருபரனைக் கூடி வாழ்வதால் சித்திப்பது எனும் குறிப்பினையும் கூறினார். அரசன் தீவிர தரத்தை அடைந்திருந்தமையால் அப் பொழுதே இள வேதியரைப் பணிந்து தம்மைச் சீடனாக ஏற்குமாறு இரந்தான். கும்ப முனி அரசனைச் சீடனாகக் கொண்டு அவனோடே சிறிது காலம் உறைந்து ஞான வித்தை புகட்டினார்.

'அரசனே மனத்திற்கு வடிவம் வாசனை யேயாம். மனமென்று உரைக்கும் உரை அவ்வாசனையின் பரியாயாய நாமதேயாம். குற்றங்களெல்லாம் குவிந்திருக்கும் கூடாகிய நான் என்பதுவே மனமாகிய மரத்திற்கு வாய்ந்த வித்தாகும். ஆதியில் உண்டாகிய இந்த அகம் பாவத்தின் முளை அனுபவத்தோடுகூடி இதுதானென அறுதியிட்டு உரைத்தற்குரிய வடிவமில்லாமல் இருக்கும்பொழுது அது புத்தி எனப்படும். இந்தப் புத்தி என்கின்ற முளையினிடத்தே நிலை நிறைந்து வளர்கின்ற கொம்பர்களைச் சங்கற்பம் என்பர். ஆகவே சித்தம், புத்தி, மனம் எனும் இவை அகங்காரத்தின் நாமங்களேயாம் என அறிதி. இத்தகைய மனம் என்கின்ற பொல்லாத மரத்தின் கொப்பை வெட்டி வேரை ஈர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய்க்குழி, வினையினையுடைய வாசனை என்னும் கொம்பர்கள் காய்களைக் காய்க்கும். அவற்றை ஞான வாளால் தறிக்கின் அவை மாயும். நினைவற பற்றற மௌனியாய் வந்து எதிர்ந்ததற்றைச் செய்பவரே மனத்தைச் செயித்தோராவர்............ ஆதலின் மிகுந்த சன்மார்க்க நெறியாலே அந்த மனம் எனும் மரத்தின் வேரை (அகம்பாவத்தை) அறுத்துச் சுடின் மனம் இறக்கும்' என்றவாறாகக் கும்பமுனி சிகித்துவசனுக்கு ஞான வித்தை புகட்டினர். இத்தகைய ஞான வித்தையினாலே சிகித்துவசன் "சுவாமி நின் அருளாலும் தெய்வத்தாலும் எல்லாவறிவையும் விட்டு நீங்கிய அதீதத்தில் மௌனியாய் நின்று மாயையின் கரை கண்டேன். வரும் பேறெல்லாம் பெற்றேன். இனியான் காண்டற்கும் கேட்டற்கும் வேண்டுவதென்றொன்றில்லை. எப்பொழுதும் அநவரதமும் பூரணனானேன், அயர்வற்றேன், பிறவியற்றேன் பயமற்றேன் மயக்கமும் பற்றுமறுத்தேன். சமமாய் நின்றேன். உயர்வுற்றேன். எல்லாமானேன். ஒரு செயலு மில்லாதவனானேன். வெளியை (ஆகாயம்) ஒத்து வெளிவுஞ் சாந்தமும் எய்தினேன்.'' என்றவாறாக ஞான சுகத்தில் பொருந்தினான்.

இவ்வண்ணம் ஞான சுகத்திற பொருந்திய சிகித்து வரசனின் சமபுத்தியைச் சோதிக்கும் பொருட்டுக் கும்ப முனியாகிய சூடாலை சில சோதனைகளை நிகழ்த்தினர். ஒரு நாள் தேவருலகத்திலே நிகழும் விழாவில் நாரதரோடு தாமும் இருக்க வேண்டுமெனக் கூறிச் சென்ற கும்பமுனி வாடிய முகத்தினராய்த் திரும்பி வந்தனர். வாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தின் காரணத்தை விசாரித்த சிகித்துவசனி டம் தாம் ஓர் சாபம் பெற்றிருப்பதாயும் அச் சாபத்தினால் இரவு வேளையில் பெண்ணாக மாற வேண்டியுள்ளதாகவும் கூறினர். அவ்வாறே அன்றிரவு பெண்ணுமாயினர். ஒரே பாயலில் சிகித்துவசனும் பெண்ணுருவாகிய கும்பமுனியும் துயின்றனர். சிகித்துவசன் யாதொரு சபலமுமின் றித் துயின்றனன். சில நாட் சென்றதும் மெல் லியலார்க்குரிய ஆசை தமக்கும் ஏற்படுவதாகும் அவ்வாசையினைத் தீர்த்தற்காகத் தம்மை மணக்கு மாறும் வேண்டினர். அதற்கும் சிகித்துவசன் இணங்கினான். பின்னொருநாள் சிகித்துவசன் காணுமாறே தூர்த்தனொருத்தனுடன் சுகித்தி ருந்தாள். அதற்கும் சிகித்துவசன் சிறிதும் சித்தம் கலங்கிலன். இவ்வாறெல்லாம் வேண்டும் என்றோ வேண்டாம் என்றோ நன்றெனறோ தீதென்றோ எண்ணாமல் நின்ற நிலையில் தீரனாய் நிற்கும் சிகித்துவசனின் நிலையறிந்து மகிழ்ந்து. கும்பமுனி மற்றுமோர் சோதனை நிகழ்த்தலானார். தேவேந் திரன் தேவர்கள் புடைசூழ அவ்விடயத்திற்கு எழுந்தருளி சிகித்துவசனைத் தெண்டனிட்டு வணங்கி பொன்னாடையொன்று ஈந்து தேவருல குக்கு வந்து கற்பகோடி காலம் சொர்க்க போகத்தை அனுபவிக்க வேண்டுமென இரந்து நின்றதே அச்சோதனையாகும். சிகித்து வசனோ இந்திரனை நோக்கி

'தேவலோகத்து இன்பமனைத்தையும் நானறி வேன். எனக்கோ இங்கென்றும் அங்கென்றும் இல்லை. எங்கும் சுவர்க்கமே. எங்கும் எனக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் சுகமேயாம். ஆதலால் பொன்னாடை யான் வேண்டேன். புரந்தர நீர் வாசஞ் செய்யும் பொன்னாடேகீர்' என்று அற்பமுமிச்சையின்றிக் கூறினான்

"சிகித்துவசன் விருப்பு வெறுப்புக்களை வேரற மாய்க்க ஞானநிட்டனாயினான். இவனை இனி மறைந்து நின்று சோதிக்கல் வேண்டியதன்று" என்று நிச்சயித்த சூடாலை தன் சுய உருவில் தோன்றி நின்றனர். சூடாலையை வியப்புடன் நோக்கி நின்ற சிகித்துவசனிடம் நிழ்ந்ததனைத் தையும் ஞானதிருட்டியால் காணுமாறு செய்தனர்.

பின்னர். ஞானியானவர் இருந்தபடியே இருக்கும் ஞான நிலையில் சற்றும் பிசகாமல் பொருந்திய வண்ணம் வாழ்தலே முறையெனவும் தமக்குப் பொருந்திய வாழ்வு அரசவாழ்வேயென வும் கூறி நாட்டிற் கழைத்துச் சென்றனர்.

நாட்டை அடைந்த அரசன் அரச பாரத் தைச் சிறப்புற நடத்தி விதேக முத்தியடைந் தனன்.

அலங்காரமான காவிய நடையிலும் உரு வகக் கதைகளூடாக உபதேசம் புரியும் உத்தியா லும் சிறந்து பொலியும் சுவை மிக்க சூடாலை சரிதம் இங்கு மிகச் சுருக்கமாகக் கூறப்பெற்றுள் ளது. இனி இக்கதையின் பொருட்சுவையை ஒரு வாறு நிரற்படுத்துவோம்.

1. இவ்வுலகிலே அரச போக மீறாகத் துய்க்கும் வாய்ப்பு வரினும் அவற்றாலெல்லாம் சுத்த சுகம் பொருந்த மாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆன்ம சுகத்திற் பொருந்த வேண்டுமென்ற தாகம் ஏற்படுதல் வேண்டும்.

3. தானம், தருமம், தீர்த்தம், யாத்திரை, பூசை, வழிபாடு, தவம், செபம், தியானம் யாவும் ஆன்ம சுகத்திற் பொருந்துவோர்க்குரிய ஆயத் தங்களேயன்றி முடிந்த சாதனையாக......

4. ஞான நிட்டரான குருபரனை அடைந்து தன்னைத் தன்னால் அறிதலே ஆன்ம சுகத் திற் பெருந்துவதற்கான உண்மைநெறியாகும்.

5. ஆன்ம சுகத்திற் பொருந்திய ஞானியரின் ஆசாரங்கள்.

அ) வேண்டுதல் வேண்டாமை இல்லாதிருத்தல்

ஆ) நன்று, தீது, இதம் அகிதம் ஆகியவற்றால் தாக்குறாத சமபுத்தி படைத்தவராயிருத்தல்.

இ) பொருந்திய வண்ணம் பூமியில் வாழ்தல்.

" குருபக்தியே பெரும் பேறு,
கொண்டாடிக் கொண்டாடி ஆறு "

- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு சுவாமி ஆத்மகணானந்த மகராஜ்
ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
மலர் வெளியீட்டின் பொழுது உரை
நிகழ்த்துகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருநோக்கு
# சிவானந்தப் பேறே தமிழ்

திருமுறைகளில் அருளாளர்களால் எடுத்தாழப் பெறும் "தமிழ்" என்ற சொல்லுக்கு அது ஒரு மொழியின் பெயர் என்ற அளவில் மட்டுமே பொருள் கொண்டுவிட முடியாது. மொழியைக் குறிக்கவும் அச் சொல் பயன்படுத்தப் பெறுகிறது. என்பது உண்மையேயாயினும் மொழி என்ற அளவில் மட்டுமே அதனைக் குறுக்கி நிறுத்திவிட முடியாது என்பதும் கொள்ளக் கிடக்கிறது. எடுத்துக்காட்டாக

" நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு "

என வரும் சுந்தரர் திருவாக்கினை நோக்காலம். தமிழ் பரப்புவது ஞானசம்பந்தரின் குறிக்கோள் எனக் கொள்ள இயலாது. இனி தம்பியாரூரரைத் தடுத்தாட் கொண்ட காலத்து இறைவன் அவருக்கு அளித்த பணி.

" மண் மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக "

என்பதே சேக்கிழார் அருளிய வாக்கு. இவ்வாறே திருமூலரும்

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே "

என்று கூறியருளினார். மேலே குறிப்பிடப் பெற்றவைகளுக்கெல்லாம் தமிழ்மொழி என்பதே பொருள் என்று கொள்வது நேரியதாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தை வெளிப்படுத்திய இறைவனே ஆகமமாகி நின்று அண்ணித்தான். அவனே அருளாளர்களைத் தோற்றுவித்து அவர்களை உள்நின்று இயக்கி இத்திரு நெறிய தமிழை வெளிப்படுத்தியுள்ளான். ஆதலின் தமிழ் என்ற சொல் விரிந்த பொருளுடைதாகிய நிறை பேரின் பப்பரம்பொருளை சிவத்தை துய்த்துத் துய்த்து அத்துய்ப்பில் பொங்கி எழுந்து பூரித்த நிறை பேரின்பம் என்று கொள்ளலே சிறப்புடைய தாம் எனவே

" நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தன் "

என்னும் சுந்தரர் வாக்கிற்கு நாள்தோறும் தாம் துய்த்துச் துய்த்துச் சிறந்த சிவானந்தப் பெரும்பேறு எனப்பெறும் இன்ப நுகர்வை தமிழை இனிய இசைப்பாட்டுக்களின் மூலம் உலக மக்களுக்கு எடுத்துரைத்துப் பரப்பிவந்த ஞான சம்பந்தப் பெருந்தகை எனக் கொள்ள வேண்டும். அவ்வாறே திருமூலர் கூற்றாகிய

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்ற தொடருக்கும் சிவபரம்பொருளைத் துய்த்துத் துய்த்து நிறை பேரின்பத்தில் அழுந்தி நின்று தேக்கெறிந்து கருங்கல் மனமும் கரைந் துருக கண்கள் தொடுமணற்கேணியிற் சுரந்து நீர் பாய, மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி அன்பாய் நின்று அவ்வனுபவத்தைப் பிறரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவிக்குமாறு வெளிப்படுத்தி அமைப்பதை தமிழ் செய்தல் என்று கூறினாராகக் கொள்ளல் வேண்டும்.

திருவருளால் நாம் பெற்ற சிவானுபவத்தை வெளிப்படுத்துகின்ற நிலையில் அருளாளர்கள் தம் செயலற்று, அந்தத் தாப் அற்று நாதன் தம் செயலில் ஒன்றியிருந்து தம் கருவி கரணங்களைத் திருவருளோடு சேரச்செய்து அதனோடு ஒத்த நிலையில் யோகபரராய் நின்று திருநெறிய தமிழை வெளிப்படுத்திய நிகழ்வைத் திருஞான சம்பந்தர் ''வழிமொழி'' என்னும் சிறப்புச் சொல்லால் குறிப்பிட்டருள்வதைக் காணலாம்.

ஞானவாரமுதுண்ட பிள்ளையார் அருளிச் செய்த திருப்பதிகங்களுள் ஒன்று வழிமொழித் திருப்பதிகம் அப்பதிகத்தின் இறுதித் தமிழாகிய திருக்கடைக்காப்பு

''ஒழுகல் அரிது அழிகலியில் உலியுலகு
பழிபெருகு வழியை நினையா
முழுதுடலில் எழுமுயிர்கள் தழுவுமுனி
குழுவினொரு செழுவு சிவனைத்
தொழுதுலகில் இழுகு மலம் அழியும் வகை
கழுவும் உரை கழுமலநகர்ப்
பழுதிலிறை எழுதுமொழி தமிழ் விரகன்
வழிமொழிகள் மொழி தகையவே.''

என்பதாம். இத்திருக்கடைக்காப்புச் செய்யுள் தக்க திருக்கடைக்காப்பு எனப் பாராட்டப் பெற்ற பெருமையுடையது. இதனுள் ஞானவாரமுதுண்ட பிள்ளையார் தாம் பாடிய பாக்களை வழிமொழிகள் என்று குறிப்பிட்டு அருள்வதோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளைப் பற்றிய விளக்கங்களையும் கூறியருளுகின்றார்.

1. சிவனைத் தொழுது இழுக்குமலம்
 அழியும் வகை கழுவும் உரை.

2. கழுமல வளநகர்ப் பழுதில் இறை
 எழுதும் மொழி தமிழ்.

என்பனவே அவ்விளக்கங்கள். இக்கலியுகத்தில் அறவொழுக்கம் மேற்கொள்ளல் அரிது. எனவே அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இக்கலியுகத்தில் ஒரு நலமும் விளைவிக்கும் ஆற்றலில்லாத இவ்வுலகத்தில் ஆன்மாக்களுக்கு உய்தி நெறி கூடுவது அரிதாயிற்று. அவைகளுக்குப் பழி பெருகும் நிலையை நினைந்து நெக்குக்குருகி, அவைகளின் மூலமலம் அழியும் வகையில் சிவனைத் தொழுது வேண்ட வேண்டிப் பெற்ற மேன்மையால் அவ்வான் மாக்கள், உய்தி பெறுமாறும் அவைகளின் மலம் நீங்குமாறும் அருளிச் செய்யப் பெற்ற உரை. இதுவே முதற்பகுதி தரும் விளக்கம். இரண்டாவது பகுதியானது கழுமலம் எனப் பெயர் பெற்று சீகாழிப் பதிவாழ் இறைவன் உள்நின்று அமைத்துக் கொடுத்த மொழி என்ற விளக்கத்தைத் தருகிறது.

முடிவாகக் கொள்ளுமிடத்து திருநெறிய தமிழ் என்பதற்கு சிவானந்தப்பேறு என்பதே பொருள். தமிழ் என்பது சிவானந்தம் என்பதை விளக்கும் சொல்லாகவே இங்கே நிற்கிறது எனக் கொள்ள வேண்டும்.

டாக்டர் வை. இரத்தினசபாபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மஞானம்

## 1896 - ஆம் ஆண்டு, அக்டோபர் 29 - ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் லண்டனில் பேசியது

நான் கடோபநிஷதம் என்ற உபநிஷதத்தி லிருந்து ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிறேன். ஸர் எட்வின் ஆர்னால்ட் கடோபநிஷதத்தை, 'மரணத்தின் ரகசியம்' (Secret of Death) என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கி றார். அதை உங்களில் சிலர் படித்திருக்கலாம்.

உலகம் முதலில் எப்படித் தோன்றியது என்று ஆரம்பித்து, பிரபஞ்சத்தின் படைப்புவரை சென்ற ஆராய்ச்சி. வெளி நோக்கில் திருப்திகர மான பதில் கிடைக்காததால். எவ்வாறு உள் முகமாகத் திரும்பியது என்பதைப் பற்றி, முன் னொரு சொற்பொழிவில் பார்த்தோம். கடோப நிஷதம் மனத்தத்துவ ரீதியாக இந்தப் பிரச் சினையை அணுகி, மனிதனின் உள் இயற்கையைப் பற்றி அறிய முயல்கிறது.

''வெளி உலகத்தை யார் படைத்தது? அது எப்படி உருவாகியது'' என்பதே முதலில் கேள் வியாக இருந்தது. ஆனால் பிறகு கேள்வி வேறாக மாறியது; ''மனிதனை வாழவும், இயங்கவும் வைப்பது எது? அவன் இறக்கும்போது அது என்ன ஆகிறது?'' என்பதே அந்தக் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தோன்றிய தத்துவ மேதைகள், தூல உலகத்தின் மூலமாக ஆன்மிக உண்மையைக் கண்டு பிடிக்க முயன்றார்கள். கடைசியில், இந்தப் பிரபஞ்சத்தை ஆளும், பெரும் சக்தி கொண்ட ஆட்சியாளர் ஒருவர் இருக்கிறார் ஆனால், அவர் தெய்வமல்ல; மனிதன் தான், என்ற முடிவுக்கே அவர்கள் வந்தார்கள். ஆனால் அது முழு உண்மையாக இருக்க முடியாது. அதில் ஓரளவு உண்மையே இருக்கிறது இந்தப் பிரபஞ்சத்தை நாம் மனிதன் என்ற நிலையிலிருந்து பார்க்கிறோம் எனவே நம் கடவுளும் நமக்கு மனித உருவாகவே தோன்றுகிறார்.

ஒரு பசு தத்துவம் பேசுவதாகவும் அதற்கு மத உணர்வு இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அதன் பிரபஞ்சம் பசுப் பிரபஞ்சமாகவும், பிரச்சினைக்கு உரிய தீர்ப்பு பசு சம்பந்தமான தீர்ப்பாகவும் இருக்கும். மனிதர்களாகிய நம் கற்பனையில் தோன்றிய கடவுளை அதனால் பார்க்க முடியாது. பூனைகள் தத்துவ ஞானிகளானாலும் இது போலவே ஆகும். அதாவது, பூனைப் பிரபஞ்சம், பூனைத் தீர்ப்பு, பூனைக் கடவுள்! ஆகவே பிரபஞ்சத்தைப் பற்றிய நம்முடைய விளக்கம், முழு உண்மையாக இருக்க முடியாது என்பது தெரிகிறது.

அது மட்டுமல்ல, நம் கருத்து பிரபஞ்சம் முழுவதையும் தழுவியதாகவும் இல்லை, பிரபஞ்சம் முழுவதையும் தழுவாத கருத்து, மிகவும் கேவலமான சுயநலக் கருத்தே ஆகும். அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலக் கருத்தை ஒப்புக் கொள்வது மாபெரும் தவறாகும்

வெளிப்புறத்திலிருந்து பிரபஞ்சத்தைப்பற்றி நமக்குச் கிடைக்கும் கருத்தில் ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது அதாவது, பிரபஞ்சத்தையும் உண்மையையும் நம்முடைய நோக்கிலிருந்துதான் நாம் பார்க்கிறோம். என்பதுதான் அந்தக் குறைபாடு, அந்த உண்மையை நம் புலன்களின் மூலம் நாம் அறிய முடியாது; நாம் அதைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

ஐம்புலன்களைக் கொண்ட உயிர்களின் நோக்கிலேயேதான் நாம் பிரபஞ்சத்தை அறிகிறோம். நமக்கு இன்னுமொரு புலன் கிடைக்குமானால் பிரபஞ்சத்தைப் பற்றி நம்முடைய நோக்கே மாறிவிடும்.

நமக்கு ஒரு வகையான காந்த சக்திப் புலன் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது, நம் புலன்களால் இப்போது உணரமுடியாத பல கோடிக் கணக்கான சக்திகளை நாம் ஒரு வேளை உணரலாம்.

நம்முடைய புலன்கள் எல்லைக்கு உட்பட்டவை; மிகவும் குறுகிய எல்லைக்கு உட்பட்டவை. இந்த எல்லைகளுக்குள்ளேதான் நாம் பிரபஞ்சம் என்று சொல்வது இருக்கிறது. அந்தப் பிரபஞ்சப் பிரச்சினைக்கு, நம்முடைய சிற்றறிவுக்கு எட்டியது கடவுள் கருத்துத்தான் சமாதானமாக இருக்கிறது. ஆனால், அது முழுப் பிரச்சனைக்கும் தீர்வாகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மனிதன் அந்த நிலையிலேயே நின்றுவிட முடியாது. அவன் ஒரு சிந்தனைப் பிராணி. எல்லாப் பிரபஞ்சங்களையும் ஒரே பதிலில் விளக்கும் தீர்வையே அவன் விரும்புகிறான். மனிதர்கள், தெய்வங்கள், மற்றுமுள்ள உயிர்கள் எல்லாம் சேர்ந்திருக்கும் ஒரே உலகத்தைக் காணவும், எல்லா நிகழ்ச்சிகளையும் விளக்கும் ஒரே தீர்வைப் பெறவும்தான் அவன் விரும்புகிறான்.

எல்லாப் பிரபஞ்சங்களையும் உள்ளடக்கிய ஒரு பிரபஞ்சத்தைக் காணவே முதலில் நாம் விரும்புகிறோம். புலன்களின் மூலமாகவோ, அல்லது வேறு வழியாகவோ, முடிந்தால் எல்லா நிலைகளின் (Various Planes of Existence) ஊடேயும் ஊடுருவிச் செலலும் ஒரு தனிப்பொருளைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

கீழுலகம், மேலுலகம் இரண்டுக்கும் பொதுவான ஒரு தன்மையை நாம் கண்டுபிடித்துவிட்டால் நம் பிரச்சினை தீர்ந்துவிடும். வெறும் தர்க்க ரீதியாகவே எல்லா இருப்புக்கும் அடிப்படைத் தத் தத்துவம் ஒன்று உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள முடிந்தாலும் கூட இந்தப் பிரச்சினைக்கு ஓரளவு விளக்கம் கிடைக்கும்.

பிரபஞ்சத்தை பற்றிய நம்முடைய நோக்கு முழுமையாக இல்லாமல், மிகவும் குறுகியதாக இருப்பதால் அதன் மூலம் நிட்சயமாக தீர்வு கிடைக்காது. ஆகவே இன்னும் ஆழ்ந்து சிந்திப்பதன் மூலமே, நாம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையின் மையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கின்றோமோ, அவ்வளவு வேறுபாடுகள் பிரச்சினையின் தீர்வுகளிலும் இருக்கின்றன என்பதை ஆரம்பகாலச் சிந்தனையாளர்கள் கண்டுபிடித்தார்கள். பிரச்சினையின் மையத்தை நெருங்க நெருங்க, தீர்வுகளுக்குள் ஒற்றுமை காணப்படுவதையும் அவர்கள் கண்டுபிடித்தர்கள்

ஒரு வட்டத்தின் மையத்தை நெருங்க நெருங்க ஆரங்கள் ஒன்று சேரும் இடமும் நெருங்குகின்றது மையத்திலிருந்து விலக விலக, ஆரங்களின் இடைவெளியும் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

மையத்திலித்திலிருந்து வெளி உலகப் வெகு தூரத்தில் இருப்பதால் எல்லா நிகழ்ச்சிகளும் நடப்பதற்கான பொது நிலைமை அதில் இல்லை நிகழ்ச்சிகளில் ஒரு பகுதி மட்டுமே வெளி உலகில் நடக்கின்றது வேறு பகுதிகளும் இருக்கின்றன. அவை மனம், ஒழுக்கம், அறிவு போன்றவையே இவை, வாழ்க்கையின் பல வேறு நிலைகளாகும். இவற்றில் ஒன்றை மட்டும் ஆராய்ந்து பிரச்சினைக்கு முழுத் தீர்வையும் காண முயலுவது முடியாத காரியம்.

ஆகவே, வாழ்கையின் எல்லா நிலைகளும் எந்த மையத்திலிருந்து கிளம்புகின்றவோ அந்த மையத்தில் நின்றுகொண்டுதான் பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் முயலவேண்டும். அப்படித்தான் நாம் தீர்வு காண ஆரம்பிக்க வேண்டும். 'அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையம் எங்கே இருக்கின்றது? அது நமக்குள்ளே யேதான் இருக்கின்றது.

பழங்கால ரிஷிகள், ஆழ்ந்து ஆராய்ந்து சிந்தனை செய்து, கடைசியில், மனித ஆன்மாவின் மையம்தாம் பிரபஞ்சத்தின் மையமும் ஆகும். என்று கண்டு பிடித்தார்கள். எல்லா நிலைகளும் மனித ஆன்மா என்ற அந்த ஒரு மையத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கிறன. அதுதான் பொதுவான நிலையாகும். ஆகவே அங்கே நின்று கொண்டுதான் பிரச்சினைக்குப் பொதுவான தீர்வை நம்மால் காண முடியும்.

ஆகவே, இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தது. யார் என்ற கேள்வி தத்துவ ரீதியாகப் பொருளற்றது அந்தக் கேள்விக்குக் கிடைக்கும் பதிலும் பயனற்றதாகவே இருக்கிறது.

இந்தப் பிரச்சனையைக் கடோபநிஷதம் பலவகை உருவங்களால் விளக்கியிருக்கிறது. மிகப் பழங்காலத்தில், ஒரு பெரிய பணக்காரன்இருந்தான் அவன் ஒரு யாகம் செய்தான். அந்த யாகத்தில் அவன் தன் பொருள்களையெல்லாம் தானந் கொடுக்க வேண்டியிருந்தது. அவன் மனப்பூர்வ மாக இந்த யாகத்தைச் செய்யவில்லை. புகழை யும் பெருமையும் அடைவதற்கு மட்டுமே அவன் அந்த அந்த யாகத்தைச் செய்தான். அதனால், தனக்குப் பயனில்லாத பொருள்களை மட்டுமே அவன் தானம் செய்தான்; அதாவது, குருடான, நொண்டியான, மலடான, வயதான பசுக்களையே அவன் யாகத்தின்போது தானமாகக் கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பணக்காரனுக்கு நசிகேதன் என்ற ஒரு மகன் இருந்தான். தன்னுடைய தந்தை, அநியாயம் செய்வதை அவன் அறிந்தான். அவர் தாம் எடுத்துக். கொண்ட விரதத்தை மீறியதையும் அவன் உணர்ந்தான். ஆனால் தந்தையிடம் என்ன பேசுவதும் என்று அவனுக்குத் தெரியவில்லை' இந்தியாவில், குழந்தைகளுக்கு, அன்னையும் பிதாவுமே முன்னறி தெய்வம்.

ஆகவே. நசிகேதன் மிகவும் பணிவுடன் தந்தையை அணுகி, ''உங்கள் யாகத்தில், நீங்கள் எல்லாவற்றையுமே தானமாகக் கொடுக்க வேண்டியிருப்பதால், என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கப் போகிறீர்கள் ?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வியால் மிகவும் வெறுப்படைந்த தந்தை. 'மகனே, நீ என்ன சொல்கிறாய்? ஒரு தந்தை, தன் மகனைத் தானமாகக் கொடுப்பதா?'' என்று கேட்டான். நசிகேதன், மேலும் இரண்டு முறைகள், அதே கேள்வியைத் திரும்பக் கேட்டான். அதனால், கோபமடைந்த தந்தை, ''உன்னை நான் யமனுக்குக் கொடுக்கிறேன்'' என்று பதிலளித்தான். நசிகேதன் மரண தேவதையான யமனிடம் போனான்என்று கடோபநிஷதத்தில் கதை மேலும் தொடர்கிறது.

முதலில் மரணமடைந்த மனிதனே யமபதவி பெற்றான். அவன் சொர்க்கத்துக்குச் சென்று, பித்ருக்களுக்கு அதிபனானான். நல்லவர்கள் இறந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவுடன் யமனிடம் சென்று அவனுடன் நீண்ட காலம் வாழ்கிறார்கள். யமன் என்ற பெயருக்குத் தகுந்தாற்போல் அவன் மிகவும் தூய்மை, புனிதம் ஒழுக்கம், எல்லாம் நிறைந்த நல்லவன்.

ஆகவே, நசிகேதன் யமனுலகம் சென்றான். ஆனால் தெய்வங்களும் சில சமயம் வெளியே போவதுண்டு; அதன்படி யமன் அப்போது யமனுலகில் இல்லை. ஆகவே, நசிகேதன் மூன்று நாட்கள் யமனுலகில் காத்திருந்தான். மூன்று நாட்களுக்குப் பின யமன் திரும்பி வந்தான் நசிகேதன் மூன்று நாட்கள் யமனுலகில் காத்திருந்தான். மூன்று நாட்களுக்குப் பின் யமன் திரும்பி வந்தான் நசிகேதன் காத்திருப்பதைக் கண்டு பதறி, 'எல்லாம் அறிந்த மதிப்புக்குரிய விருந்தாளியான நீ உணவொன்றுமில்லாமல் மூன்று நாட்களாக இங்கே காத்துக் கொண்டிருக்கிறாயே! ஓ, பிராம்மணனே! உனக்கு என் நமஸ்காரங்கள்; எனக்கு நன்மை உண்டாகட்டும். நீ வந்த சமயம் நான் இங்கே இல்லாததற்கு மிகவும் வருந்துகிறேன். ஆனால் அதற்குத் தக்க பரிகாரம் செய்து விடுகிறேன் ஒருநாளைக்கு ஒரு வரமாக, மூன்று நாள்களுக்கு மூன்று வரங்கள் உனக்குத் தருகிறேன்; எது வேண்டுமானலும் கேள்'' என்று யமன் அன்போடு நசிகேதனிடம் கூறினான். நசிகேதனும், ''என் தந்தைக்கு என் மீதுள்ள கோபம் மறைய வேண்டும்; நீங்கள் என்னை இங்கிருந்து போக அனுமதித்தவுடன் அவர் என்னை அன்புடன் வரவேற்க வேண்டும்; இதுவே என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வரம்'' என்று கேட்டான். யமன் இந்த வரத்தை முழுவதும் அளித்து விட்டான்.

மனிதர்களைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லும் ஒரு யாகத்தைப் பற்றி அறிய வேண்டும் என்பதே நசிகேதனின் இரண்டாவது வரமாக இருந்தது. உப நிஷதங்களின் சம்ஹிதைப் பகுதியில் காணப்படும். மிகப்பழைய கருத்து சொர்க்கத்தைப் பற்றியதே என்பதை நாம் அறிவோம். அந்தச் சொர்க்கத்தில் உள்ளவர்கள் ஒளிபொருந்திய உடலுடன் பித்ருக்களோடு வாழ்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காலப் போக்கில் இன்னும் பல்வேறு கருத்துகள் வந்தன. ஆனால் அவை திருப்தி அளிப்பனவாக இல்லை. இன்னும் உயர்ந்த ஏதோ ஒன்று தேவையாக இருந்தது. இந்த உலக வாழ்க்கையிலிருந்து சொர்க்க வாழ்க்கை அதிகம் வேறுபட்டதாக இருக்காது. அதிகமாகப் போனால் சொர்க்க வாழ்க்கை நோயற்ற செல்வந்தன் ஒருவனுடைய வாழ்க்கையைப் போல்தான் இருக்கும். அங்கே எல்லையற்ற புலனின்பங்களும் நோயறியாத திடமான உடலும் எல்லோருக்கும் கிடைக்கும் அவ்வளவுதான். அது இகலோகம் போலவேதான் இருக்கும். இன்னும் கொஞ்சம் உயர்வு மிக்கதாக, உயர்ந்த சுகங்களோடு இருக்கும். பொருள்களாலான வெளி உலகம் பிரச்சினையை தீர்க்காது என்பது நாம் அறிந்த விடயம். ஆகவே எந்தச் சொர்க்கத்தாலும் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. பொருள் (Matter) என்பது இயற்கையின் மிக அற்பமான ஒரு பகுதியே என்பதை நாம் எப்போதும் நினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் கொள்ள வேண்டும். ஆகவே இந்த உலகத்தால் தீர்க்க முடியாத பிரச்சினையை இந்த உலகத்தைப்போல் பல மடங்கு உயர்வான உலகங்களாலும் தீர்க்க முடியாது. நமக்குத் தெரிந்த இயற்கையின் மிக அதிகமான பகுதி, பொருள் அல்ல, உதாரணமாக, வெளி உலகப் பொருள்களோடு ஒப்பிட்டால், நம்முடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் எவ்வளவோ லீலைகள் புரிவது நமக்குத் தெரிகிறதல்லவா? இப்படி அளவற்ற சுறுசுறுப்புடன் இயங்கும் இந்த உள்ளுலகம் எவ்வளவு பிரமாண்டமானது! இதனுடன் ஒப்பிடும்போது புலனியக்கம் மிகமிக அற்பமானது. புலனின்பமே எல்லாம் என்று சாதிப்பதுதான் இந்தச் 'சொர்க்கக் கருத்தின்' தவறு.

ஆகவே, சொர்க்கத்தைப் பற்றிய இந்தக் கருத்து எல்லோருக்கும் முழுத்திருப்தியை அளிக்கவில்லை. உண்மை இப்படி இருந்தாலும், மனிதர்களைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லும் ஒரு யாகத்தைப் பற்றித் தெரிந்துகொள்வதையே நசிகேதன் இரண்டாவது வரமாகக் கேட்டான். இப்படிப்பட்ட யாகங்கள் தேவர்களைத் திருப்திப்படுத்தி இவற்றைச் செய்யும் மனிதர்களைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் என்ற கருத்து வேதங்களில் இருந்தது.

எல்லாச் சமய நூல்களையும் ஆராய்ந்து பார்த்தால், பழைமையே புனிதமானது என்ற கருத்து அவை எல்லாவற்றுள்ளும் பரவி நிற்பதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். உதாரணமாக, இந்தியாவிலிருந்து எங்கள் முன்னோர்கள், பனைஓலைச்சுவடிகளையே எழுதுவதற்குப் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் காலப்போக்கில் காகிதம் செய்யக் கற்றுக்கொண்டார்கள். இருந்தாலும் இன்னும் ஓலைச் சுவடிகளைப் புனிதமாக நினைக்கும் பழக்கம் போக வில்லை பழங்காலத்தில் சமைக்க உபயோகித்த பாத்திரங்கள் பல மாறுதல்களை அடைந்தாலும், பழைய பாத்திரங்களைப் புனிதமாகவே இன்றும் நினைக்கிறார்கள். இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இந்த எண்ணம் இவ்வளவு தீவிரமாக இல்லை உயர்ந்த மரக்குச்சிகளை ஒன்றோடொன்று உரசித் தேய்த்து நெருப்புண்டாக்கும் பழக்கம் பல்லாயிரம் வருடங்களுக்கும் முற்பட்டது இருந்தாலும், யாகங்கள் செய்வதற்குத் தீ உண்டாக்க இன்றும் இந்த முறையைத் தவிரவேறு முறைகளைப் பயன்படுத்துவதே இல்லை.

ஆசிய ஆரியரின் மற்றொரு கிளையினரும் இப்படிப்பட்ட எண்ணங்களைக் கொண்டவர்களாகவே இன்றும் இருக்கிறார்கள். ஆசிய ஆரியர்கள் மின்னலிலிருந்தே நெருப்பை உண்டாக்குவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார்கள், இந்தப் பழக்கத்தைக் காட்டுவதற்காக, இவர்களுடைய தற்காலச் சந்ததியினர் இன்னும் இதே முறையில் நெருப்பு உண்டாக்குவதையே விரும்புகின்றனர். பல புதுப் பழக்கங்களை அவர்கள் கற்றுக்கொண்டாலும். பழைய பழக்கங்களையே புனிதமாக நினைக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹீப்ரூக்களும் இப்படியே இருக்கிறார்கள். அவர்கள் ஒருவகை மரப்பட்டையையே (Parchment) எழுதும் காகிதமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இப்பொழுது காகிதத்தில் எழுதினாலும் அந்த மரப்பட்டையையே புனிதமாக நினைக்கிறார்கள், எல்லா நாடுகளுமே இப்படித்தான். இப்போது நாம் புனிதமாக நினைக்கும் ஒவ்வொரு சடங்கும் வெறும் பழைய பழக்கம்தான் வேதத்தில் சொல்லிய யாகங்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே ஆகும். காலப் போக்கில் புதிய வாழ்க்கைமுறைகளைக் கண்டு பிடித்ததால், அவர்களுடைய கருத்துக்களில் மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டது ஆனாலும் இந்தப் பழைய பழக்கங்களை அவர்கள் இன்னும் விடவில்லை. இது போன்ற பழக்கங்களுக்குப் புனிதத்தன்மை அளித்து அவ்வப்போது இவற்றில் ஈடுபட்டும் வந்தனர்

நாளடைவில், ஒரு குழுவினர் இந்த யாகங்களை நடத்துவதையே தங்கள் தொழிலாகக் கொண்டனர். இவர்கள் தாம் பின்னால் புரோகிதர்கள் ஆனார்கள் இவர்கள் யாகம் நடத்துவதையே தங்கள் தொழிலாகக் கொண்டனர். எல்லாவற்றுக்கும் யாகத்தையே அவர்கள் நம்பியிருந்தனர். தேவர்கள் இந்த யாகங்களின் நறுமணங்களை நுகர்வதற்காகவே வந்தனர். யாகங்களின் சக்தியால் எதையும் இந்த உலகில் சாதிக்க முடியும் என்ற கருத்தும் உயர்ந்தது சில குறிப்பிட்ட நைவேத்தியங்களைச் செய்வதாலும், சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்களை உச்சரிப்பதாலும், சில வகையான விநோதமான ஹோம குண்டங்களை அமைப்பதாலும், தேவர்கள் எல்லா வரங்களையும் அளிப்பார்கள் என்ற நம்பிக்கையும் தோன்றியது. ஆகவேதான் எந்த வகை யாகத்தைச் செய்வதன் மூலம் ஒருவன் சொர்க்கத்தை அடையமுடியும் என்று தெரிந்து கொள்வதையே இரண்டாவதுவரமாக நசிகேதன் கேட்டான். இந்த இரண்டாவது வரத்தையும் யமன் தயங்காமல் அளித்ததோடு மட்டுமல்லாமல், இந்த யாகம் இனிமேல் நசிகேதன் பெயராலேயே வழங்கும் என்ற வாக்குறுதியையும் அளித்தான்.

இப்போது தான் மூன்றாவது வரம் வருகிறது இங்கிருந்துதான் உபநிஷதமே ஆரம்பிக்கிறது. "எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை; மனிதன் இறந்தவுடன் சிலர் 'அவன் இருக்கிறான்' என்றும், வேறு சிலர் 'அவன் இல்லை' என்றும் கூறுகிறார்கள் உங்கள் உபதேசத்தின் மூலம் இதை நான் புரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்று நசிகேதன் யமனைக் கேட்டுக் கொண்டான். ஆனால் யமனைப் பயம் பிடித்துக் கொண்டது. மற்ற இரண்டு வரங்களையும் அவன் மிகவும் சந்தோஷமாகவே அளித்தான். "முற்காலத்தில் இருந்த தேவர்களாலேயே இந்த ரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த நுண்ணிய ரகசியம், புரிந்து கொள்வதற்கு அவ்வளவு சுலபமானதல்ல. நசிகேதா, வேறு ஏதாவது வரத்தைக் கேள்; இந்த விஷயத்தை உனக்கு உபதேசிக்

குமாறு என்னை வற்புறுத்த வேண்டாம்; என்னை விட்டு விடு" என்று யமன் நசிகேதனை வேண்டிக் கொண்டான்.

ஆனால் நசிகேதன் இந்த விஷயத்தில் மிகவும் உறுதியாக இருந்தான். "காலதேவனே! 'இந்த விஷயத்தில் தேவர்களுக்கே சந்தேகம் இருக்கிறது; இதைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல' என்று நீங்கள் கூறுவது உண்மைதான். ஆனால் இந்த விஷயத்தைத் தெளிவாக உபதேசிப்பதற்கு வேறு யாரும் எனக்குக் கிடைக்கமாட்டார்கள். அது மட்டுமல்லாமல் இந்த வரத்திற்கு ஈடான வேறு வரமே இல்லை" என்று அவன் யமனிடம் உறுதியாகக் கூறினான்.

"நூறு வருடங்கள் வாழக் கூடிய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் பசுக்கள், யானைகள், குதிரைகள் தங்கம் இவை எல்லாவற்றையும் கேள். பூலோகத்தில் சக்கரவர்த்தியாக இருந்து. விரும்பும் காலம் வரை வாழ வேண்டும் என்று கேள். அல்லது இந்த வரங்களுக்கு இணையாக நீ நினைக்கும் எந்த வரத்தை வேண்டுமானாலும் கேள். செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் கேள். அல்லது, இந்தப் பரந்த பூமியில் ஓர் அரசனாக இரு. உனது எல்லா ஆசைகளையும் நான் நிறைவேற்றி வைக்கிறேன். உலகில் நிறைவேற்றிக் கொள்ள முடியாத ஆசைகளை நிறைவேற்றும்படிக் கேள். சாதாரண மனிதனால் பெறமுடியாத இந்த தேவப் பெண்கள், ரதங்கள், தேவகானம் எல்லாவற்றையும் நீ பெறுமாறு செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசிகேதா இவற்றையெல்லாம் அடைந்து இன்புறு வாய் ஆனால் மரணத்திற்குப் பின் என்ன ஆகி றது என்ற உபதேசத்தை மட்டும் கேட்காதே'' என்று கால தேவன் வேண்டிக் கொண்டான்.

''இவையெல்லாம் கணத்தில் அழிபவையே ஆகும். இவையெல்லாம் நம் புலன்களின் சக்தியை அரித்து விடுகின்றன. காலதேவனே, நீண்ட ஆயுள் என்பது கூட மிகக் குறுகிய காலந்தான். இந்தக் குதிரைகள், ரதங்கள், கானங்கள், நாட்டியங்கள் எல்லாம் உங்களிடமே இருக்கட்டும் செல்வத்தால் மட்டுமே மனிதன் திருப்தி அடைய மாட்டான். சாகும் போது செல்வம் கூடவா வருகிறது? எங் கள் ஆயுளின் அளவு நீங்கள் விதித்தபடிதான். நான் கேட்ட வரத்தையே நான் வேண்டுகிறேன்'' என்று நசிகேதன் தீர்மானமாகக் கூறினான்.

இந்தப் பதிலால் யமன் மிகவும் மகிழ்சி அடைந்தான். ''பூரணத்துவம் வேறு இன்பங்களை அனுபவிப்பது வேறு. இவை இரண்டும் வெவ்வேறு லட்சியங்கள் உடையவை. ஆகவே மனிதர்களை வெவ்வேறு பாதைகளில் இவை செலுத்துகின்றன. பூரணத்துவத்தைத் தேர்ந்தெடுப்பவன் தூய்மை அடைகிறான். இன்பங்களைத் தேர்ந்தெடுப்பவன் உண்மையான லட்சியத்தை இழக்கிறான். மனிதனின் முன் பூரணத்துவம், இன்பம் ஆகிய இரண்டு இலட்சியங்களும் இருக்கின்றன. ஞானி இரண்டையும் ஆராய்ந்து ஒன்றிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொன்றை வேறுபடுத்தி அறிகிறான். இன்பத்தை விடப் பூரணத்துவமே உயர்ந்தது என்று அறிந்து பூரணத்துவத்தையே அவன் தேர்ந்தெடுக்கிறான். ஆனால் அஞ்ஞானியோ உடல் சுகத்தை விரும்பி இன்பத்தையே தேர்ந்தெடுக்கிறான். வெளிப்பார்வைக்கு மட்டுமே விரும்பத்தக்கவையாகத் தோன்றும் பொருள்களைப் பற்றி நன்கு யோசித்து உனது ஞானத்தின் மூலம் அவற்றை நீ ஒதுக்கி விட்டாய்'' என்று யமன் நசிகேதனை மிகவும் பாராட்டினான். பிறகு யமன் நசிகேதனுக்கு உபதேசிக்க ஆரம்பித்தான்.

இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைகளை வென்றாலொழிய உள்ளத்தில் உண்மை பிரகாசிக்காது என்ற வேதக் கருத்து இந்த உபநிஷதத்திலிருந்து இப்போது நமக்குக் கிடைக்கிறது இது ஆசைகளைத் துறப்பது பற்றிய மிக முன்னேறிய கருத்தாகும். வண்ணங்கள், சுவை, தொடு உணர்ச்சி போன்ற இந்தப் பயனற்ற புலனின்பங்கள் ஒவ்வொரு கணமும் கூட்டமாக வந்து நம்மைத் தாக்கித் தவறான பாதைகளில் இழுத்துச் செல்கின்றன. இவை நம்மை வெளிப் பொருள்களுக்கு அடிமையாக்கி விடுகின்றன, இவற்றுக்கு நாம் அடிமையாகததது போல் எவ்வளவு பாசாங்கு செய்தாலும் இவற்றை நம்மால் ஏமாற்ற முடிவதில்லை. இந்த நிலை நீடிக்கும் வரை நம் உள்ளங்களில் உண்மை எவ்வாறு பிரகாசிக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமன் மேலும் தொடர்ந்தான்: "பயனற்ற செல்வங் ளின் மயக்கட்டில் மூழ்கியிருக்கும் அஞ் ஞானியின் மனத்தில் எல்லாவற்றுக்கும் அப்பாலுள் ளதும் எல்லாவற்றையும் கடந்து நிற்பதுமான ஒன்றைப் பற்றிய சிந்தனை எப்படி வரும்? இந்த இகலோகம்தான் இருக்கிறது; பரலோகம் இல்லை என்று அஞ்ஞானிகள் நினைப்பதால் அவர்களால் காலச்சக்கரத்திலிருந்து விடுபடவே முடிவதில்லை. இந்த உண்மை புரிந்துகொள்வதற்கு மிகவும் கடி னமானது. இந்த உண்மை இடைவிடாமல் காது களில் விழுந்து கொண்டே இருந்தாலும் பலரால் இதைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. இதைப் புரிந்து கொளவதற்கு குரு சிஷ்யர் இருவருமே சிறந்த தகுதி படைத்தவர்களாக இருக்க வேண் டும். இது உணர வேண்டிய உண்மையே ஒழிய வாதப் பிரதிவாதங்களுக்கு இங்கே இடமில்லை. ஆகவே வீண்தர்க்கத்தால் மனத்தைக் குழப்பிக் கொள்ளக் கூடாது."

ஒவ்வொரு மதமும் நம்பிக்கையை வற்புறுத்து கிறது என்பது நாம் அறிந்ததே. கண்மூடித்தன மாக நம்புவதையே சிறு வயதிலிருந்து நமக்குப் புகட்டி விடுகிறார்கள். இந்தக் கண்மூடித்தன மான நம்பிக்கை சந்தேகமில்லாமல் ஆட்சேபத் துக்கு உரியதுதான். ஆனால் இதை ஆராய்ந்து பார்த்தால் இதற்குப் பின்னால் ஒருமகத்தான உண்மை மறைந்திருப்பது நமக்குத் தெரிய வருகி றது அந்த உண்மையைப் பற்றித்தான் இப்போது இந்த உபநிஷதத்தில் நாம் படிக்கப் போகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண் தர்க்கங்கள் கடவுளை அறிய நமக்கு உதவி புரிவதில்லை. ஆகவே வீண் தர்க்கங்களால் மனத்தைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. உண்மை உணரக் கூடியதே ஒழிய தர்க்கத்தால் அறியக் கூடியதல்ல.

தர்க்கங்களுக்கும், காரண காரிய வாதங்களுக்கும் சில உணர்வுகளே அடிப்படையாக இருக்கின்றன. இந்த உணர்வுகள் இல்லாமல் தர்க்கங்கள் எழ இடமில்லை. நாம் ஏற்கனவே உணர்ந்த சில உண்மைகளை ஒப்பிடுவதே காரண காரிய வாதம் ஆகும். நாம் உணர்ந்த இந்த உண்மைகள் இல்லை என்றால் காரண காரிய வாதத்துற்கு இடமில்லை. வெளி விஷயங்களைப் பொறுத்தவரையிலும் இது உண்மையானால் உள்விஷயங்களைப் பொறுத்த வரையிலும் கூட இது ஏன் உண்மையாகக் கூடாது ரசாயன விஞ்ஞானி சில ரசாசயனப் பொருட்களைக் கலந்து சில முடிவுகளைக் காண்கிறான். இது ஓர் உண்மை. நாம் இதைப் பார்க்கிறோம் உணர்கிறோம். ரசாயன சம்பந்தமான நம்முடைய தர்க்கங்களுக்கு இதையே அடிப்படையாகவும் பயன்படுத்திக் கொள்கின்றோம். பௌதிக விஞ்ஞானிகளும், மற்ற விஞ்ஞானிகளும் கூட இதே முறையையே பின்பற்றுகின்றனர். சில உண்மைகளை உணர்வதே எல்லாவகையான அறிவுக்கும் அடிப்படையாக இருக்கின்றது. இந்த அடிப்படையின் மேல்தான் நாம் நம்முடைய காரண காரிய வாதங்களை அமைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் மனிதர்களில் பெரும் பாலோர் அதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காலத்து மனிதர்கள் ஆன்ம ஆராய்ச்சிக்கு உணர்வு அடிப்படை தேவையில்லை என்றும் வீண் தர்க்கங்களாலேயே ஆன்மானுபவம் கிடைத்து விடும் என்றும் நினைக்கின்றார்கள். இது மிகவும் விந்தையாக இருக்கிறது. ஆகவேதான் மனத்தை வீண் தர்க்கங்களால் குழப்பிக் கொள்ளக்கூடாது என்று நமக்குச் சொல்கிறார்கள்.

ஆன்ம ஆராய்ச்சி அனுபவமே தவிர வெறும் வார்த்தை ஜாலமல்ல. நாம் ஆன்ம ஆராய்ச்சி செய்து உண்மை என்ன என்பதைக் காணவேண்டும். நாம் இதைப்புரிந்து கொள்வதோடல்லாமல் புரிந்து கொண்டதை அனுபவத்தில் உணரவும் வேண்டும். அதுவே சமயம். எவ்வளவு பேசினாலும் அனுபவ உணர்வு கிட்டாது. ஆஸ்திகத்திற்கும் நாஸ்திகத்திற்கும் சமமான நிரூபண வாதங்கள் உள்ளன. ஆகவே கடவுள் உண்டா இல்லையா. என்பதைத் தர்க்கத்தால் நிரூபிக்க முடியாது. ஆனால் கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் நம்முடைய இதயங்களில்தான் இருக்கிறார். நீங்கள் எப்போதாவது அவரைப் பார்த்திருக்கிறீர்களா?

இந்த உலகம் இருக்கின்றதா இல்லையா என்ற பிரச்சினையே இன்னும் தீர்ந்தபாடில்லை. லட்சிய வாதிகளுக்கும் (Idealist) பிரத்யட்ச வாதிகளுக்கும் (Realist) இடையே இந்த விஷயத்தைப் பற்றி நடக்கும் வாக்கு வாதம் முடிவில்லாமல் போய்க் கொண்டே இருக்கிறது. இப்படி இருந்தாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் இருக்கிறது என்பதும், அது இயங்கிக் கொண்டே இருக்கிறது என்பதும் நமக்குத் தெரிகிறது. நாம் வெறும் வார்த்தை ஜாலங்களிலேயே உழன்று கொண்டிருக்கிறோம். ஆகவே, வாழ்க்கையைப் பொறுத்த வரை, எல்லா விஷயங்களிலும் உண்மையைப் பார்க்கவே நாம் முயல வேண்டும். விஞ்ஞானத்தில் உள்ளது போல், மெய்ஞ்ஞானத்திலும் சில உண்மைகளை நாம் உணர வேண்டும். அவற்றை அடிப்படையாக வைத்துத்தான் மெய்ஞ்ஞானத்தைநாம்வளர்க்கமுடியும். ஒருமதத்திலுள்ள எல்லா மூடக்கொள்கைகளையும் நாம் நம்ப வேண்டும் என்ற கண்மூடித்தனமாக வற்புறுத்துதல், மனித குலத்தையே இழிவுபடுத்துவதாகும். எல்லாவற்றையும் நம்பும்படி நம்மைவற்புறுத்தும் ஒரு மனிதன் தன்னை மட்டுமல்லாமல், அப்படி நாம் நம்பினால், நம்மையும் இழிவுபடுத்துகிறான்.

உலகிலுள்ள ஞானிகள் எல்லாம் ஆன்ம ஆராய்ச்சிசெய்து தம்மைத் தாம் உணர்ந்து, அந்த அனுபவத்தைப் பிறருக்கு வார்த்தைகளால் ஓரளவு மட்டுமே சொல்ல முடியும். ஆனால் நாமே ஆராய்ச்சி செய்து அந்த அனுபவத்தைப் பெற்றால் தவிர நம்மால் அந்த ஞானிகள் சொல்வதை நம்ப முடியாது. இதுதான் மெய்ஞ்ஞானம் ஆனால் சமயங்களைத் தாக்கிப் பேசுவோரில் 99.9 சதவீதம் பேர் ஆன்ம ஆராய்ச்சி செய்யவோ, உண்மையை உணர்ந்து கொள்ளவோ எந்தவித முயற்சியும் செய்யாதவர்களாகவேஇருக்கிறார்கள். இதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இப்படி இவர்கள் சொல்வது 'சூரியனை நம்பும் நீங்கள் எல்லோரும் முட்டாள்கள்' என்று ஒரு குருடன் சொல்வதைப் போல் இருக்கிறது. ஆகவே இவர்கள் சொல்வது மெய்ஞ் ஞானத்தை எந்த விதத்திலும் பாதிக்க முடியாது

ஆன்மானுபவத்தைப் பற்றிய இந்தக் கருத்து நாம் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். சாஸ்திரங்களிலும் கோவில் களிலும் மெய்ஞ்ஞானம் கிடைக்காது என்பதை நாம் புரிந்துகொள்ளும்வரையில் மதங்களிடையே சண்டைகளும், பூசல்களும் கருத்துவேறுபாடுகளும் இருந்துகொண்டேதான் இருக்கும். அது ஓர் உண்மையான அனுபவம். ஆன்மதரிசனம்பெற்ற ஒருவனே மெய்ஞ்ஞானியாவான். சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்துத் தலைகீழாக ஒப்பிக்கக் கூடிய பண்டிதர்களுக்கும் சுகபோகங்களில் மூழ்கித் திளைக்கும் அறிவற்ற மூடனுக்கும் இடையே உண்மையில் எந்த வித்தியாசமும் இல்லை. நாம் எல்லோரும் நாஸ்திகர்களே. நாம் இதை நன்கு உணர்ந்து ஒப்புக்கொள்வோமாக! வெறும் ஏட்டுக்கல்வி நம்மை மெய்ஞ்ஞானிகளாக்காது. கிறிஸ் தவர்கள் முகம்மதியர்கள் அல்லது வேறு எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி ஏசு கிறிஸ்துவின் மலை உபதேசத்தின் உண்மையை சுய அனுபவத்தில் உணர்ந்த உடனே பூரணனாகிறான்: தெய்வமாகிறான். உண்மை இப்படி இருக்க உலகில் பல கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உபதேசத்தின் உண்மையை உணர்ந்து கொள்ள மனிதகுலம் எப்போதாவது முயலும் என்பதே இதன் பொருள். உண்மையில் பார்த்தால் இரண்டு கோடியில் ஒருவன் கூட உண்மையான கிறிஸ்தவன் அல்ல.

இதைப் போலவே இந்தியாவில் முப்பது கோடி வேதாந்திகள் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் ஆயிரத்தில் ஒருவன் மெய்ஞ்ஞானம் பெற்றால் கூட இந்த உலகம் சீக்கிரமே பெரிய மாறுதலை அடையும். நாம் எல்லோரும் நாஸ்திகர்களே! ஆனாலும் 'நான் நாஸ்திகன்' என்று ஒப்புக் கொள்பவனோடு நாம் சண்டை போடுகிறோம். நாம் எல்லோரும் அஞ்ஞான இருளில் மூழ்கியிருக்கின்றோம். நம்மைப் பொறுத்தவரையில் மெய்ஞ்ஞானம் என்பது சாஸ்திர அறிவாகவும் வாய்ப் பேச்சாகவுமே இருக்கிறது வார்த்தை ஜாலங்கள் செய்யும் ஒரு மனிதனை நாம் மெய்ஞ்ஞானி என்று கருதுகிறோம் ஆனால் இதுமெய்ஞ்ஞானமல்ல. 'வார்த்தைகளை அற்புதமாக ஒன்று சேர்க்கும் திறமை, பேச்சாற்றல், புத்தகங்களுக்குப் பல விதங்களில் விளக்கங்கள் எழுதும் ஆற்றல் இவை யாவும் பண்டிதர்களை இன்புறுத்த மட்டுமேதான் பயன்படும்; ஆனால் இவை சமயம் ஆகாது.'

உண்மையான ஆன்மானுபவம் ஆரம்பிக்கும் போது தான் சமயம் தொடங்குகிறது. அதுதான் சமயத்தின் உதயம்: அப்போதுதான் நாம் ஒழுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இருக்க முடியும். நாம் இப்போது மிருகங்களை விட அதிக ஒழுக்கமாக இல்லை! சமூகக் கட்டுப்பாடு ஒன்றுதான் நம்மை அழுத்திக் கொண்டிருக்கிறது. 'திருடுவதற்குத் தண்டனை கிடையாது' என்ற சமூகவிதியை இன்று கொண்டு வந்தால் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய சொத்துக்களுக்காகப்பேயைப்போல்அலைவோம்! நம்மை ஒழுக்கமுடையவர்களாக வைத்து இருப்பவர்கள் போலீஸ்காரர்களே! சமூகக் கருத்துக்களே நம்மை ஒழுக்கமுடையவர்களாக வைத்திருக்கின்றன. உண்மையில் மிருகங்களைவிட நாம் எந்த விதத்திலும் உயர்ந்தவர்களல்ல. நம் உள்மனத்தில் நாம் இந்த உண்மையை நன்கு உணர்கிறோம். ஆகவே நாம் வேடதாரிகளாக இருக்க வேண்டாம். நாம் சமய வாதிகள் அல்ல என்ற உண்மையையும் மற்றவர்களைக் கேவலமாக மதிக்க நமக்கு உரிமை கிடையாது என்ற உண்மையையும் நாம் ஒப்புக்கொள்வோம். நாம் எல்லோரும் சகோதரர்களே. மெய்ஞ்ஞானம் அடைந்த பின்தான் நாம் எல்லோரும் உண்மையான ஒழுக்கத்தோடு இருக்க முடியும்.

நீங்கள் ஒரு தேசத்தைப் பார்த்திருப்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் அதைப் பார்க்கவில்லை. என்று சொல்லச் சொல்லி யாராவது உங்களை வற்புறுத்தினாலும்கூட உங்கள் உள்மனத்தில் அதைப் பார்த்த அந்த உணர்வு அழியவே அழியாது. இந்த உலகத்தை நீங்கள் எந்த உணர்வோடு பார்க்கிறீர்களோ, அதைவிடப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி மடங்கு நுண்ணிய உணர்வோடு கடவுளை நீங்கள் உணர்ந்திருந்தால் உங்கள் நம்பிக்கையை எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாது. அப்போதுதான் உங்கள் நம்பிக்கை உண்மையான தா ஆகிறது. 'கடுகளவு நம்பிக்கை உள்ளவன் கூட' என்று உங்கள் நூலில் சொல்லியிருப்பது இந்தப் பொருளில் தான். அப்போது நீங்கள் உண்மை உருவாகவே ஆகிவிடுவதால், உண்மை. உங்கள் உள்ளத்தில் தானே பிரகாசிக்கும்.

'மெய்ஞ்ஞானத்தை உணருங்கள்; வெறும் பேச்சால் பயனில்லை' என்பதே வேதாந்தத்தின் முடிவான உபதேசம். ஆனால் மெய்ஞ்ஞான உணர்வைப் பெறுவது அவ்வளவு சுலபமல்ல. ஒவ்வொரு மனித இதயத்தின் மிக ஆழப் பகுதியிலும், அணுவிற்குள்ளும் ஆதி அந்தமற்ற இறைவன் தன்னை ஒளித்துக் கொண்டிருக்கிறான் உள்முகத் தியானத்தின் மூலம் ரிஷிகள் அவனை உணர்ந்திருக்கிறார்கள். அவனை உணர்வதன்மூலம் அவர்கள், இன்ப- துன்பங்கள், பாவ- புண்ணியங்கள் என்று நாம் சொல்லும் செயல்கள்' நன்மை தீமைகள், இருப்பு- இல்லாமை எல்லாவற்றையும் கடந்துவிட்டார்கள். அவனை உணர்ந்தவன் உண்மையை உணர்ந்தவனே அப்படியானால் சொர்க்கம் என்ன ஆயிற்று? துன்பங்களற்ற இன்பமே சொர்க்கக் கருத்தாகும். அதாவது' இந்த வாழ்க்கையின் துன்பங்களை நாம் விரும்பவில்லை; இன்பங்களை மட்டுமே விரும்புகிறோம் என்பதே இதன் பொருள். இது சந்தேகமில்லாமல் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கருத்துத்தான். இது இயற்கையாகவே நம் மனத்தில் எழுகிறது. ஆனால், முழுமையான நன்மை அல்லது முழுமையான தீமை என்று எதுவுமே இல்லை. ஆகவே இந்தக் கருத்து அடியோடு தவறானது

தன் சொத்தில் பத்து லட்சம் பவுண்களே எஞ்சியிருந்தன என்பதை ஒரு நாள் உணர்ந்த ரோமாபுரிப் பணக்காரனைப் பற்றி நீங்கள் எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். ''நாளைக்கு என்ன செய்வது'' என்று திகைத்து, அவன் உடனே தற்கொலை செய்து கொண்டான். பத்து லட்சம் பவுண்களை அவன் ஏழ்மையின் சின்னமாகவே கருதினான்! எனவே, எது இன்பம்? எது துன்பம்? இவற்றின் மதிப்பு எப்போதும் மாறிக் கொண்டே இருக்கிறது 'வண்டி ஓட்டுபவனாக எப்பேதும் வண்டியை ஓட்டிக் கொண்டு திரிவது தான் என்னை இன்பத்தின் உச்சிக்குக் கொண்டு செல்லும்' என்று சிறு குழந்தையாக இருந்த போது நான் நினைத்ததுண்டு ஆனால் இப்போது நான் அப்படி நினைக்கவில்லை நாம் எந்த இன்பத்தைத்தான் நிலையாகப் பற்றிக் கொள்கிறோம்? இந்த ஓர் அம்சத்தை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இது தான் நம்மை விட்டு இறுதியாக அகன்று செல்லும் மூட நம்பிக்கைகளில் ஒன்று'

இன்பத்தைப் பற்றி எல்லோருக்கும் ஒரே மாதிரி கருத்து இருப்பதில்லை. எனக்கு ஒரு மனிதனைத் தெரியும். ஓர் உருண்டை அபினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுங்காத நாளெல்லாம் அவனுக்கு இன்பமாகவே இருக்காது. நிலமெல்லாம் அபின் நிறைந்த சொர்க்கத்தையே அவன் கனவில் காணுவானோ, என்னவோ! ஆனால் அப்படிப்பட்ட சொர்க்கம் எனக்கு மிகவும் துன்பம் அளிப்பதாகவே இருக்கும். ஆறுகள் ஓடும் அழகான தோட்டங்கள் நிறைந்த சொர்க்கத்தைப் பற்றியே அரபுக் கவிதைகளில் அடிக்கடி சொல்லியிருப்பதை நாம் காணலாம். அளவுக்கு மீறிய நீர் நிறைந்த ஒரு தேசத்திலேயே தான் என் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்திருக்கிறேன்- ஒவ்வொரு வருடமும் பல கிராமங்கள் வெள்ளக் காடாகின்றன: அயிரக் கணக்கான உயிர்கள் பலியாகின்றன. ஆகவே, ஆறுகள் ஓடும் தோட்டங்கள் நிறைந்ததாக என்னுடைய சொர்க்கம் இருக்காது என்னுடைய சொர்க்கம் மிகக் குறைவான மழையுள்ள பூமியாகவே இருக்கும். இன்பங்களைப் பற்றிய நம்முடைய கருத்து. எப்போதும் மாறிக் கொண்டே இருக்கிறது. ஓர் இளைஞன், சொர்க்கத்தைப் பற்றிக் கனவு கண்டால், அங்கே தனக்கு ஓர் அழகான மனைவி இருப்பதாகக் கனவு காணுவான். அவனே வயதானவனாக ஆனபின், அவனுக்கு மனைவி தேவையில்லை.

நம்முடைய தேவைகளே நமது சொர்க்கங்களை உருவாக்குகின்றன. நம் தேவைகளின் மாறுதலுக்கேற்ப, நம்முடைய சொர்க்கங்களும் மாறுதலடைகின்றன. புலனின்ப வாதிகளின் சொர்க்கத்தைப் போன்ற சொர்க்கம் நமக்கு இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேறவே முடியாது. இது ஆன்மாவிற்கு நாம் கொடுக்கும் பெரிய சாபமே ஆகும். நாம் அடையக் கூடியது இவ்வளவுதானா? சிறிது காலம் கதறுகிறோம்! கடைசியில் கேட்பாரற்று ஒரு நாயைப் போலச் சாகிறோம். சிறிதுகாலம் சேளிக்கையில் ஈடுபடுகிறோம். இந்த அற்ப விஷயங்களுக்காக நாம் ஏங்கும் போது, மனித குலத்துக்கே ஒரு பெரிய சாபக்கேட்டை உண்டாக்கி விடுகிறோம்! உலக இன்பங்களை நாம் துரத்திக் கொண்டு போகும்போது நாம் இதைத்தான் செய்கிறோம். ஏனென்றால் உண்மையான இன்பம் எது என்று நமக்குத் தெரியாது.

இன்பத்தைக் கைவிடச் சொல்லி வேதாந்தத் தத்துவம் நம்மை வற்புறுத்துவதில்லை; மாறாக உண்மையான இன்பத்தை அறிந்து கொள்ளச் சொல்லியே வற்புறுத்துகிறது.

நோர்வே நாட்டினரின் சொர்க்கம் ஒரு மிகப் பெரிய போர்க்களமாக இருக்கும். அங்கே எல்லோரும் ஓடின் (Odin) என்ற தெய்வத்தின் முன்னால் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு காட்டுப் பன்றியை வேட்டையாடுகிறார்கள். பிறகு தமக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் வெட்டி, மாய்த்துக் கொள்கிறார்கள். ஆனால் ஏதோ ஓர் அபூர்வ சத்தியால் சண்டை முடிந்த சிறிது நேரத்துக்குள்ளேயே இறந்தவர்களெல்லாம் பிழைத்துக் கொள்கிறார்கள். பிறகு அவர்கள் ஒரு விசாலமான கூடத்துக்குள் செல்கிறார்கள். அங்கே பன்றியைச் சுட்டு வைத்திருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டமாக அதைச் சாப்பிடுகிறார்கள். அதன் பிறகு அந்தக் காட்டுப் பன்றிக்கு மறுபடியும் உயிர்வந்து வேட்டையாடப்படுவதற்குத் தயாராக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இதே கதைதான் இது அநேகமாக எங்கள் சொர்க்கத்தைப் போலவேதான் இருக்கிறது; துளியும் மாறுதல் இல்லை எங்கள் கருத்துகள் சற்று நாகரிகமாக வேண்டுமானால் இருக்கலாம். காட்டுப் பன்றி வேட்டையாடப் பட்டு சாப்பிடப்பட்டு ஒவ்வொரு நாளும் மறுபடியும் உயிர் பெற்று, இதே கதையைத் தொடர்வதாக அவர்கள் கற்பனை செய்வது போல், நாமும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடுவதற்கும், எப்போதும் புலனின்பம் கிடைத்துக் கொண்டே இருக்கும் சொர்க்கத்துக்குப் போவதற்கும் தான் விரும்புகிறோம்.

வேதாந்தத் தத்துவம், எப்போதும், மாறாத, பூரணமான இன்பத்தைப் பற்றித்தான் வற்புறுத்துகிறது. அந்த இன்பம், நாம் உலக வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்பங்களைப் போன்றதல்ல. ஆனாலும் உலக வாழ்க்கையின் இன்பங்களெல்லாம் உண்மையான இன்பத்தின் மிகச் சிறு துளியே என்று வேதாந்தம் எடுத்துக் காட்டுகிறது. ஏனென்றால் பேரின்பம் ஒன்று தான் உண்மை பேரின்பம் மாயையால் மூடப்பட்டு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு கேலிக்குட்பட்டிருந்தாலும் நாம் ஒவ்வொரு கணமும் உண்மையில் அந்தப் பேரின்பத்தையே அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எந்த இடத்தில் ஒரு துளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் இருந்தாலும் கூட அது திருடனுக்குத் திருடுவதில் கிட்டும் இன்பமாகக்கூட இருக்கலாம் அது பேரின்பத்தின் வெளிப்பாடே ஆகும் ஆனால் அது மாயையால் மறைந்து பலவகையாகக் குழம்பி தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. அது அல்லாத மற்றவற்றை, 'இது அல்ல, இது அல்ல' (நேசி நேசி) என்று விலக்குவதால்தான் அதைப் புரிந்து கொள்ள முடியும். இதன் பிறகுதான் 'இதுதான்' என்று உணரும் முயற்சி ஆரம்பிக்கிறது. அஞ்ஞானத்தையும் போலித் தனத்தையும் விட்டொழித்த பின்தான், உண்மை நமக்கு முன்னால் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளத் தொடங்குகிறது. மேலான உண்மையை நாம் உணர்ந்தவுடன் நாம் அதுவரை விலக்கியிருந்த பொருள்கள் புதிய உருவம் பெற்றுவிடும். தெய்வத்தன்மை பெற்றுவிடும். அவற்றை நாம் புதிய கோணத்திலிருந்து பார்க்க ஆரம்பித்துவிடுவோம் அப்போது அவை புனிதத் தன்மை பெற்றுவிடும் அப்போது தான் நாம் அவற்றின் உண்மையான உருவத்தைப் புரிந்து கொள்ள முடியும் ஆனால், உண்மையின் சிறு அளவையாவது நாம் அறிந்து கொண்டால்தான் அவற்றை நாம் புரிந்து கொள்ள முடியும். முதலில் நாம் அவற்றைக் கைவிட்டுவிடுகிறோம். பிறகு அவை தெய்வத் தன்மை பெற்று நம்மிடமே திரும்பி வருகின்றன. நம்முடைய துன்பம், துக்கம், அற்பச் சந்தோஷங்கள் எல்லாவற்றையும் நாம் விட்டுவிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேதங்களெல்லாம் எதைப் பற்றிப்பேசுகின்றனவோ, தவத்துக்கெல்லாம் குறிக்கோளாக இருப்பது எதுவோ, எதை அடைவதற்காக மனிதர்கள் துறவு பூணுகிறார்களோ' அதை நான் ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறேன்— அது தான் ஓம்', ,வேதங்களில் ''ஓம், என்ற இந்த வார்த்தையை மிகவும் உயர்த்திப் பேசியிருக்கிறார்கள் இந்த வார்த்தை, மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது.

'உடல் இறந்த பின்மனிதன் என்ன ஆகிறான்' என்ற கேள்விக்குயமன்இப்போது பதிலளிக்கிறான். ',ஞானபரமான அந்த ஆன்மா பிறப்பும் இறப்பும் அற்றது; அது எதிலிருந்தும் தோன்றுவதில்லை; அதிலிருந்தும் எதுவும் தோன்றுவதில்லை. பிறப்பற்ற, எப்போதும் நிலைத்திருக்கும் ஆன்மா, உடல் அழிந்த பின்னும், அழிவதில்லை. ஆன்மா கொல்வதுமில்லை; கொல்லப்படுவதுமில்லை. ஆகவே கொல்பவன், தான் கொல்வதாகவும் கொல்லப்படுபவன், தான்'கொல்லப்படுவதாகவும் நினைத்தால், அவர்கள் இருவரும் உண்மையை அறியாதவர்களே ஆவர்.,' இது மிகவும் உன்னதமான நிலை முதல் வரியிலுள்ள 'ஞானபரமான, என்ற வார்த்தைக்கு உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். நாம் வேதாந்தத்தை ஆராய்ந்து கொண்டே போகும் போது, ஞானமும், தூய்மையும் ஆன்மாவில் எப்போதுமே இருக்கின்றன என்ற கருத்தையே காண்கிறோம். அவை, மங்கலாகவோ, பிரகாசமாகவோ வெளிப்படுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தான் வேறுபாடு. மனிதர்களுக்கு இடை யேயும், படைக்கப்பட்டுள்ள எல்லாவற்றுக்கும் இடையேயும் உள்ள வேறுபாடு, அளவில்தானே ஒழியத் தன்மையில்இல்லை. எப்போதும் நிலைத் திருக்கும், எப்போதும் ஆனந்தமயமான, எப்போதும் தூய்மையான, எப்போதும் முழுமை யான பரம்பொருளே எல்லாவற்றுக்கும் பின் னணியாகவும், எல்லாவற்றின் உண்மை வடிவமா கவும் இருக்கிறது. புண்ணியவான்கள், பாவிகள், இன்பம் அனுபவிப்பவர்கள், துன்பம் அனுபவிப்ப வர்கள், அழகானவர்கள், அழகற்றவர்கள் மனி தர்கள், மிருகங்கள். எல்லாவற்றிலும் இருக்கும் ஒரே பொருள் ஆன்மாதான். அது ஒளி மய மானது. வெளிப்பாட்டில் தான் வேறுபாடு தோன் றுகிறது சிலவற்றிடம் இந்த் வெளிப்பாடு அதிக மாகவும், சிலவற்றிடம் குறைவாகவும் காணப்படு கிறது. ஆனால் இது ஆன்மாவை எந்த விதத்தி லும் பாதிப்பதில்லை. ஆடை அணிவதில், ஒரு வனை விட மற்றொருவன் தன் உடலை அதிக மாக வெளிக் காட்டினால், அந்த வெளிப்பாடு அவர்கள் உடலில் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை. ஆடையில் தான் வித்தியா சம் இருக்கிறது. வேதாந்தத் தத்துவம் முழுவதி லுமே, நன்மை, தீமை, இரண்டையும் தனித் தனித் தன்மைகளாகச் சொல்வதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவை இரண்டும் வெவ்வேறு தன்மைகளல்ல; ஒரே பொருள் நல்லதாகவோ, தீயதாகவோ இருக்கிறது. வேறுபாடு அளவில்தான் இருகிக்றது. இன்பமளிப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக இன்று நான் கருதுவது, நாளையச் சூழ் நிலையில், துன்பமளிப்பதாக மாறிவிடலாம். நமக்குக் குளிர் காலத்தில் இதமளிக்கும் அதே நெருப்பால் நம்மை அழிக்கவும் முடியும். அது நெருப்பின் குற்றமல்ல. அதே போல், ஆன்மா தூய்மையானது; முழுமையானது. தீய காரியங் களைச் செய்பவன் தன்னுடைய இந்தத் தன்மை களை உணராமல், தன்னையே ஏமாற்றிக் கொள் கிறான். கொலையாளியிடம் கூட, தூய்மையான ஆன்மா தான் இருக்கிறது. அது இறப்பதில்லை. அதை மூடி மறைத்து, வெளிப்படாமல் செய்தது அவனுடைய தவறேதான். தான் கொலை செய்யப்படுவதாக நினைக்கும் மனிதனின் ஆன்மா கொலை செய்யப்படுவதில்லை. அது எப்போதும் நிலைத்திருக்கிறது. அதைக் கொல்லவோ, அழிக் கவோ, முடியாது 'அணுவிலும் அணுவாக, பெரி யதிலெல்லாம் பெரியதாக உள்ள பரம் பொருள், எல்லா மனித இதயங்களின் ஆழத்திலும் இருக்கி றது. துன்பங்களைக் கடந்து மாசற்று இருப்ப வர்கள், பரம் பொருளின் கருணையால் ஆன்ம தரிசனம் பெறுகிறார்கள். உருவமில்லாமல், உருவ முள்ளவற்றில் இருப்பதும் இடத்தைக் கடந்து, ஆனாலும் இடத்தை நிறைத்துள்ளதாக இருப்ப தும் எல்லையற்றதும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பதும் ஆன ஆன்மாவை உணர்ந்த ரிஷிகள் என்றும் துன்பம் அடைவதில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்த ஆன்மாவைப் பேச்சின் மூலமோ விசாலமான அறிவின் மூலமோ ஏன் வேதங்களைப் படிப்பதன் மூலமாகவோ கூட உணர முடியாது' இது மிகவும் தைரியமான அறிவிப்பாகும். நான் முன்னமே சொன்னபடி உபநிஷதங்களை இயற்றிய ரிஷிகள் எதற்காகவும் தயங்காத தைரியசாலிகளாக இருந்தார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் நூலான பைபிளை மதிப்பதை விட அதிகமாக இந்துக்கள் தங்களுடைய வேதங்களை மதிக்கிறார்கள். கடவுளால் தூண்டப்பட்டவனுக்குத்தான் உண்மையின் தரிசனம் கிடைக்கிறது என்பது உங்கள் கருத்தாகும். ஆனால் எல்லாம் வேதத்தில் சொல்லியபடிதான் நடக்கும் என்ற கருத்து இந்தியாவில் இருக்கிறது. எல்லாப் படைப்புகளுமே வேதத்தின் மூலமாகத்தான் வந்திருக்கின்றன. அறிவு என்று சொல்வதெல்லாம் வேதத்தில் தான் இருக்கிறது. வேதத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் புனிதமானது. ஆன்மாவைப் போல் ஆதி அந்தமற்றது. படைத்தவரின் கருத்துக்கள் முழுவதும் வேதத்தில்தான் இருக்கின்றன' என்பதுதான் இந்தியாவில் வேதத்தைப் பற்றிய கருத்தாக இருக்கிறது. ஒரு செயலை ஏன் ஒழுக்கம் என்று சொல்கிறோம்? வேதம் சொல்வதால் தான். மற்றொன்றை ஏன் தீயொழுக்கம் என்று சொல்கிறோம்? வேதங்கள் சொல்வதால்தான் மக்களுக்கு வேதத்தில் இவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தும் வேதத்தை அதிகம் படிப்பதால் மட்டும் ஆன்ம ஞானம் அடைய முடியாது என்று தீர்மானமாகக் கூறிய ரிஷிகள் எவ்வளவு தைரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலிகளாக இருந்திருக்க வேண்டும்! ' பரம்பொரு ளுக்கு யாரிடம் கருணை உண்டாகிறதோ அவனுக் குத்தான் பரம்பொருள் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். '' ஆனால் இவ்வாறு சொல்வது பரம் பொருள், விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு நடந்து கொள்கிறது என்றே பொருள்படும். ஆனால் யமன் ' தீய காரியங்களைச் செய்து அதனால் மன அமைதியை இழந்தவர்களால் உண்மையின் ஒளியைப் பார்க்க முடியாது. யாருடைய இதயத் தில் உண்மை இருக்கிறதோ, செயலில் தூய்மை இருக்கிறதோ புலன்கள் கட்டுப்பாட்டில் இருக்கின் றனவோ அவர்களுக்குத்தான் பரம்பொருள் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் '' என்று விளக்கம் கூறுகிறான்.

இதோ ஓர் அற்புதமான சித்திரம் இருக்கிறது உடலைத் தேராகவும், ஆன்மாவை அந்தத் தேரில் சவாரி செய்பவராகவும், அறிவைத் தேரோட்டியாகவும், மனத்தைக் கடிவாளமாகவும், புலன்களைக் குதிரைகளாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள். யாருடைய குதிரைகள் நன்கு பழக்கப்பட்டிருக்கின்றனவோ, கடிவாளத்தை உறு தியாகத் தேரோட்டி பிடித்திருக்கிறானோ, அவனே எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளாகிய தன் குறிக்கோளை அடைவான். யாருடைய குதிரை கள் அடக்கப்படாமலும், கடிவாளம் உறுதியா கப் பிடிக்கப்படாமலும் இருக்கின்றனவோ, அவன் அழிவை நோக்கித் தான் போகிறான். எல்லா வற்றிலும் உள்ள இந்த ஆன்மா, நம் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கோ, புலன்களுக்கோ புலனாவதில்லை. ஆனால் மனத்தைத் தூய்மையாகவும், பக்குவம் உள்ளதாகவும் வைத்துக் கொண்டிருப்பவனால் மட்டுமே பரம்பொருளை உணர முடியும். ஐம் புலன்கள், இயற்கை இவற்றைக் கடந்து, முழுமை யானதாகவும், எல்லையற்றதாகவும், ஆதி அந்தம் இல்லாததாகவும், மாறுதலே அடையாததாகவும் உள்ள பரம்பொருளை உணர்பவனே, மரணத் தின் பிடியிலிருந்து விடுதலை பெறுகிறான். ஆனால், இந்தநிலையை அடைவது மிகவும் கடினம் இது மிகக் கூர்மையான கத்தி முனையில் நடப் பதைப் போன்றதே ஆகும். பாதை நீண்டதும், அபாயங்கள் நிறைந்ததுமாகும். ஆனால், போரா டுங்கள். முடியாது என்று பயந்து விடாதீர்கள்; விழித்தெழுங்கள்; குறிக்கோளை அடையும் வரை முயற்சியை நிறுத்தாதீர்தள்.

உபநிஷதங்களில் உள்ள மையக் கருத்து ஆன்மஞானம்தான். அடிக்கடி, இந்தப் பிரச்சி னையைப் பற்றிப் பல கேள்விகள் எழுந்து கொண்டே இருக்கும். தற்காலத்தில் இது மிகவும் அதிகமாக இருக்கிறது. 'இதனால் என்ன பயன்?', என்ற கேள்வியும், மற்றும் இது தொடர்பான பல கேள்விகளும் எழும். ஆனால், அவை எல்லா வற்றிலும் நாம் நமது பழைய தொடர்புகளால் தூண்டப்படுகிறோம் என்பதைக் காண்கிறோம்.

இத்தகைய கருத்துக்களின் தொடர்புதான் மனத்தின் மீது அளவில்லாத ஆதிக்கம் செலுத்து கிறது. குழந்தைப் பருவத்திலிருந்து இஷ்ட தெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக் கருத்தையும், மனத்தின் தனித்தன்மையையும் பற்றியே கேள்விப்பட்டு வந்தவர்களுக்கு, அத்வைதக் கருத்து மிகவும் அருவருப்பாக இருக்கிறது. ஆனால், அவர்கள் அத்வைதக் கருத்துகளை உன்னிப்பாக கேட்டு, அவற்றைப் பற்றிச் சிந்தித்து வந்தால், அவை அவர்கள் ரத்தத்திலேயே ஊறிவிடும். அவர்கள் அவற்றைக் கேட்டுப் பயப்படவும் மாட்டார்கள். சாதாரணமாக எழும் பெரிய கேள்வி, வேதாந்தத் தத்துவத்தின் பயனைப் பற்றியதே. அந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதில் தான் இருக்க முடியும் பயன் நோக்குக் கருத்துகளின் வாதப்படி, இன்பம் தேடுவதே மனிதர்களுக்கு நல்லது என்றால், மத விஷயங்களில் இன்பம் காண்பவர்கள்' ஏன் அவற்றை நாடிப் போகக் கூடாது? புலனின்பங்கள் பலருக்கு மகிழ்ச்சியைத் தருவதால், பலர் அவற்றை நாடிப் போகிறார்கள். ஆனால் புலனின்பங்களில் நாட்டமில்லாமல், அவற்றை விட உயர்ந்த இன்பங்களை நாடிச் செல்பவர்களும் இருக்கிறார்கள். உண்பதிலும், குடிப்பதிலுமே ஒரு நாய் இன்பம் அடைகிறது. எல்லாவற்றையும் துறந்து, ஒரு மலை உச்சியில் அமர்ந்து, வானத்திலுள்ள நட்சத்திரங்களை ஆராயும் விஞ்ஞானியின் இன்பத்தைப் பற்றி ஒரு நாயால் புரிந்துகொள்ள முடியாது. நாய்கள் அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்து, அவன் ஒரு பைத்தியக்காரன் என்று நினைக்கலாம் ஒரு வேளை, திருமணம் செய்து கொள்வதற்குக் கூட இந்த விஞ்ஞானியிடம் பணம் இல்லாமல் இருக்கலாம். அவன் மிக எளிய வாழ்க்கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கிறான். ஒரு வேளை, நாய் அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கலாம். ஆனால், விஞ்ஞானி அதைப் பார்த்து, "அன்புள்ள நாயே நீ அனுபவிக்கும் புலனின்பத்தைப் பற்றி மட்டுமே உனக்குத் தெரியும். அதற்கு அப்பாலுள்ள இன் பத்தைப் பற்றி உனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு இது தான் மிகவும் இன்பம் தரும் வாழ்க்கை. உன் வழியில் இன்பம் தேட உனக்கு உரிமை இருந்தால், அதே அளவு உரிமை, என் வழியில் இன்பம் தேட எனக்கும் இருக்கிறது,' என்று கூறுகிறான்

நம்முடைய சிந்தனையைப் போலவேதான் உலகிலுள்ளவர்களின் சிந்தனையும் இருக்க வேண் டும் என்று நாம் விரும்புகிறோம். நம் மனத் தையே பிரபஞ்சத்தில் உள்ளவர்களின் மனத்துக்கு அளவு கோலாகப் பயன்படுத்துகிறோம். இது தான் நாம் செய்யும் தவறு. உங்களைப் பொறுத்த மட்டிலும் புலனின்பமே மிகப்பெரிய இன்பமாக இருக்கலாம். ஆனால் என்னுடைய இன்பநோக்கும் அப்படியே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் அதை வற்புறுத்தினால் நான் உங்கள் கருத்திலிருந்து வேறுபடுகிறேன். பயன் நோக்கு முறை வாதிக்கும் ஆன்மிக வாதிக்கும் உள்ள வேற் றுமை இதுதான். "சந்தோஷமாக இருக்கிறேன். எனக்குப் பணம் கிடைக்கிறது; நான் மதத்துக்காக மண்டையை உடைத்துக் கொள்ளப் போவதில்லை. அது அறிவதற்கு எளிதான ஒன்றல்ல; அது இல் லாமலேயே நான் சந்தோஷமாக இருக்கிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பயன் நோக்குவாதி சொல்கிறான். சரி நல்லதுதான்; பயன்நோக்கு வாதிகளைப் பொறுத்த மட்டிலும் இது நல்லதுதான். ஆனால் இந்த உலகம் மிகவும் பயங்கரமானது. தன்னைச்சுற்றி இருப்பவர்களுக்கு ஊறு நேராமல் ஒருவன் இன்பம் அடைய முடியுமானால் கடவுள் அவனுக்குத் துணை நிற்கட்டும் ஆனால், இந்த மனிதன் என்னிடம் வந்து "நீயும் நான் சொல்வதைப் போல் தான் செய்யவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால் நீ ஒரு முட்டாள்" என்று சொன்னால் நான் அவனைப் பார்த்து 'நீ சொல்வது தவறு. ஏனென்றால் உனக்கு இன்பமளிக்கும் பொருள்கள் என்னைத் துளியும் கவர்வதில்லை. சில கைப்பிடி அளவுகளே உள்ள தங்கத்தைத் தேடி நான் அலைந்தால் என் வாழ்க்கை பயனற்றதாகிவிடும். அதைவிட நான் இறப்பதே மேல்" என்று சொல்வேன். ஆன்மிகவாதி அளிக்கும் பதில் இதுவாகத் தான் இருக்கும். இந்தக் கேவலமான புலனின்பங்களை அனுபவித்து ஒழித்தவனுக்குத்தான் மத உணர்வு கிட்டும் என்பதே இதற்குக் காரணம் நாம் அனுபவிக்க வேண்டியதெல்லாம் அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். இந்த அனுபவங்கள் தீர்ந்த பின்னரே அடுத்த உலகக்கதவு திறக்கிறது.

புலனின்பங்கள் சில சமயங்களில் அபாயகரமான ஆசையைத் தூண்டும் ஒரு நிலையை அடைகின்றன. பழங்கால மதங்கள் எல்லாவற்றிலுமே ஒரு பொதுவான கருத்தைக் காணலாம். இந்த வாழ்க்கையின் துன்பங்கள் எல்லாமே மறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பங்களே மிஞ்சும் ஒரு காலம் வரும் என்பதும் அப்போது இந்தப் பூமியே சொர்க்கமாக மாறி விடும் என்பதுமே இந்தக் கருத்து. இதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இந்தப் பூமி எப்போதும் இப் படியேதான் இருக்கும். இது மிகவும் பயங்கரமான அறிவிப்புத்தான். ஆனாலும் இதுதான் உண்மை. உலகின் துன்பம் குணப்படுத்த முடியாத மூட்டு வாதம் போன்றது. உடம்பில் ஓர் இடத்திலிருந்து இதை நீக்கினால் வேறிடத்துக்குச் செல்லும். இவ் வாறு இது இடத்துக்கு இடம் தாவிக்கொண்டே இருக்கும்; என்ன செய்தாலும் உடம்பை விட்டுப் போகாது.

மிகப் பழங்காலத்தில், மனிதர்கள், காடு களில், ஒருவரை ஒருவர் சாப்பிட்டுக் கொண்டு வாழ்ந்தார்கள். தற்காலத்தில், ஒருவரை ஒருவர் சாப்பிடுவதில்லை. ஆனால், ஏமாற்றிக்கொள்கி றார்கள். தேசங்களும், நகரங்களுமே இதனால் அழிந்து போகின்றன. இது முன்னேற்றத்தின் அறிகுறி அல்ல நீங்கள் முன்னேற்றம் என்று சொல்வதெல்லாம், ஆசையைப் பெருக்கிக் கொள் வதே ஆகும். ஆசைகளே துன்பத்துக்குக் காரணம் என்பதுதான் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலை, எப்பொழுதும் எதையாவது பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் பிச்சைக்காரனின் நிலை தான் அவன், பார்ப்பதையெல்லாம் சொந்தமாக் கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். இன்னும் அதிகம் வேண்டும் என்று ஏங்குகிறான். நம் ஆசைகளைத் திருப்திப்படுத்தும் சக்தி கூட்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதத்தில் அதிகரித்தால், இன்னும் வேண்டும் என்ற ஆசைகளின் சக்தி பெருக்கல் விகிதத்தில் அதிகரிக்கிறது உலகத்திலுள்ள இன்ப துன்பங்களின் மொத்த அளவு, ஆரம்பத்தில் இருந்ததைப் போலவேதான் எப்போதும் இருக்கிறது சமுத்திரத்தில் ஓர் இடத்தில் அலை எழுந்தால் அது மற்றோரிடத்தில் பள்ளத்தை உண்டாக்குகிறது. ஒருவனுக்கு இன்பம் வந்தால், மற்றொருவனுக்கோ மற்றொரு பிராணிக்கோ அதே அளவு துன்பம் வருகிறது. மனிதர்களின் தொகை பெருகுகிறது. ஆனால், அதே அளவில் சில மிருகங்களின் தொகை குறைகிறது. நாம் அந்த மிருகங்களையெல்லாம் கொன்று, அவை வசிக்கும் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறோம். நாம் வாழ்வதற்கான வழிகளை அவற்றிடமிருந்தே பெறுகிறோம். உலகில் இன்பம் அதிகரிக்கிறதென்று நாம் எப்படிச் சொல்ல முடியும்? வலியவர்கள், எளியவர்களை அழித்தே வாழ்கிறார்கள். ஆனால் அந்த வலியவர்கள் சந்தோஷமாக இருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ள ஆரம்பித்து விடுவார்கள். நடைமுறைப்படி பார்த்தால், இந்த உலகம் எப்படிச் சொர்க்கமாக முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. நடவடிக்கைகள் அதற்கு எதிராகவே இருக்கின்றன. கற்பனையில் கூட இது நடக்காது.

பூரணத்துவம் எப்போதும் எல்லையற்றதாகவே இருக்கிறது. நாம் ஏற்கனவே இந்த எல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ற தத்துவமாகவே இருக்கிறோம். நாம் அதை வெளிப்படுத்தவே முயன்றுகொண்டிருக்கிறோம். நாம் எல்லோருமே ஏன் எல்லாமே அதற்காகத் தான் முயன்று கொண்டிருக்கிறோம். இந்த அள வில், இது சரிதான். ஆனால் இந்த உண்மையை அடிப்படையாக வைத்துக் கொண்டு, சில ஜெர் மானியத் தத்துவவாதிகள், ஒரு விசித்திரமான கொள்கையை உருவாக்கத் தொடங்கியிருக்கிறார் கள். இந்த வெளிப்பாடு, முழுமையடையும் வரை யிலும், எல்லாம் பூரணத்துவம் அடையும் வரை யிலும் மேன்மேலும் உயர்ந்து கொண்டே போகும் என்பதுதான் அது முழுமையான வெளிப்பாடு என்பது என்ன? முழுமையடைவது என்றால் எல்லையற்றதாக ஆகிவிடுவது என்பது பொருள். வெளிப்பாடு என்றால் எல்லைக்கு உட்பட்டது என்பது பொருள். ஆகவே, நாமெல்லோரும் எல்லைக்கு உட்பட்ட எல்லையற்றதாகிவிடுவோம் என்றே பொருள்படும். இது முன்னுக்குப்பின் முரணானதே ஆகும். இப்படிப்பட்ட கருத்து, குழந்தைகளுக்குச் சந்தோஷமளிக்கலாம். ஆனால் இந்தக் கருத்து, குழந்தைகளின் மனங்களில், பொய் என்ற விஷவித்தைத் தூவுகிறது. மத உணர்வுக்கும் இது கேடு விளைவிக்கும். ஆனால், இந்த உலகம் இப்போது இருக்கும் ' நிலை, அதன் உண்மை நிலையிலிருந்து தாழ்வடைந்த நிலை தான் என்பதும், கடவுள் நிலையிலிருந்து வீழ்ச்சி யடைந்தவனே மனிதன் என்பதும், ஆதாம் தன் னுடைய நிலையிலிருந்து வீழ்ச்சி அடைந்து விட்டார் என்பதும் நமக்குத் 'தெரியும். மனிதன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உன்னத நிலையில் இருந்து வீழ்ச்சி அடைந்தவனே என்று போதிக்காத மதமே இன்று உலகத்தில் இல்லை. நாம் மிருகநிலைக்கு வீழ்ச்சி அடைந்து, மறுபடியும் உயர்ந்து, இந்தக் பாட்டிலிருந்து விடுதலை பெற முயன்று கொண்டிருக்கிறோம். ஆனால், எல்லையற்ற பரம்பொருளை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு நம்மால் இங்கே முடியாது. நாம் கடுமையாகப் போராடலாம். ஆனால், நம் புலன்களுக்கு நாம் கட்டுப்பட்டிருக்கும்போது, முழுமையடைய முடியாது என்பதை நாம் உணரும் காலம் வந்தே தீரும். அப்போதுதான், நாம் நம்முடைய பழைய, உண்மையான, எல்லையற்ற நிலைக்குத் திரும்பிப் போக ஆரம்பிப்போம்.

இதுதான் துறவு. நாம் வீழ்ச்சியடைந்த பாதையிலேயே திரும்பி மேலே போக ஆரம்பிப்பது தான் துன்பத்திலிருந்து விடுபடும் வழியாகும். அப்போதுதான், ஒழுக்க, தார்மிகக் கோட்பாடுகள் உருவாகத் தொடங்கும். எல்லா ஒழுக்க விதிகளுக்கும் நிரந்தரமந்திரம் எது? ,'நானல்ல; நீதான்'' அது இந்த ''நான்'' என்பது, எல்லாவற்றையும் கடந்த எல்லையற்ற பரம்பொருள், தன்னைப் பிரபஞ்சத்தில் வெளிப்படுத்திக் கொள்ளச் செய்யும் முயற்சியே ஆகும். அதன் பலன்தான் இந்தச் சிறிய ''நான்.'' இது, தான் வந்த பாதையிலேயே திரும்பிப் போய், தன் உண்மையான நிலையாகிய எல்லையற்ற தன்மையை அடையவேண்டும். ''சகோதரனே, நான் முக்கியமல்ல, நீதான் முக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம்'' என்று நாம் சொல்லும் ஒவ்வொரு முறை யும், நாம் பரம்பொருள் நிலையை நோக்கிச் செல்வதற்குத்தான் முயல்கிறோம். ''நான்தான் முக்கியம், நீயல்ல'' என்று நாம் சொன்னாலும் ஒவ்வொரு முறையும், இந்தப் புலனுலகின் மூலம் எல்லையற்ற பரம்பொருளை வெளிப்படுத்த முய லும் தவறான பாதையிலேயே நாம் அடியெடுத்து வைக்கிறோம். அவ்வாறு செய்வது, போராட்டங் களையும், தீமைகளையும் உலகில் ஏற்படுத்தி விடுகிறது. ஆனால், சில காலத்துக்குப் பின் நிலையான துறவு வந்தே தீரும். அகங்காரம் இறந்து, அழிந்து விடுகிறது. இந்த அற்பமான வாழ்வுக்காக ஏன் இவ்வள சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்? இகத்திலோ, பரத்திலோ இந்த வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்ற வீணான ஆசைகள் மரணத்திலேயே கொண்டு. போய் விடும்.

மிருகங்களின் பரிணாம வளர்ச்சிதான் நாம் என்றால், மிருகங்கள் வீழ்ச்சி பெற்ற மனிதர்களாக இருக்கலாம். இப்படி இல்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? மிகவும் எளிய முறையில் அமைந்த உடல்களிலிருந்து, மிகவும் சிக்கலான முறையில் அமைந்த உடல்கள் வரை; கீழிருந்து மேலே போகும் அமைப்புத்தான் பரிணாம தத்துவத்தின் நிரூபணம் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதை மட்டும் வைத்துக்கொண்டு, இந்த அமைப்பு, கீழிருந்து மேலேதான் போகிறது, மேலிருந்துகீழே வருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? இதில் ஏதாவது உண்மை இருப்பின் இரண்டு பக்கங்களுக்கும் ஆதாரமாகத் தர்க்கங்கள் இருக்கின்றன. ஆனால், இந்த அமைப்பு மாறி மாறி மேலேயும் கீழேயும் போய் வருகிறது என்பதே உண்மை என்று நான் நம்புகிறேன். ஒடுக்கம் இல்லாமல் விரிவு எப்படி இருக்க முடியும்? இன்னும் உயர்ந்த நிலைக்கான நம்முடைய போராட்டம், நாம் உயர்ந்த நிலையிலிருந்து வீழ்ச்சி அடைந்தவர்களே என்பதையே காண்பிக்கிறது. உண்மை இப்படித் தான் இருக்கவேண்டும். விவரங்கள் வேண்டும் ஆனால் வேறுபடலாம். ஏசு, புத்தர் வேதாந்தம், இவர்கள் எல்லோரும் ஒரே குரலில், 'நாம் எல்லோரும் நிச்சயமாக முழுமையடைவோம். ஆனால், முழுமையடையாத நிலையை விட்டொழித்தால்தான் அது முடியும், என்று சொல்கின்றனர். நான் அந்தக் கருத்தைத்தான் எப்போதும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். இந்த உலகம் ஒன்றுமே இல்லை. மிஞ்சிப்போனால்' இது ஓர் அருவருப்பான கேலிச் சித்திரமாகவும், உண்மையின் நிழலாகவும் மட்டுமே இருக்கும். நாம் உண்மையை நோக்கித்தான் போக வேண்டும். துறவு, அதை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும். நம்முடைய உண்மையான வாழ்க்கையின் அடிப்படையே துறவுதான். நாம் நம்மைப் பற்றி எண்ணாத நேரங்களில் மட்டும் நன்மையையும், உண்மையான வாழ்க்கையையும் அனுபவிக்கிறோம். நம்முடைய தனித் தன்மை என்ற அகங்காரம் அழிய வேண்டும். அப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நாம் உண்மையை உணரமுடியும். அந்த உண்மைதான் கடவுள் என்பதையும், அதுதான் நம்முடைய உண்மையான இயல்பு என்பதையும், அது எப்போதும் நமக்கு உள்ளேயும் நம்மோடு கூடவேயும் இருக்கிறது என்பதையும் நாம் உணர முடியும். நாம் அந்த, உண்மையிலேயே உறுதியாக நின்று வாழலாம். அந்த நிலை ஒன்றுதான் இன்பமான நிலை. ஆன்ம ஞானம் பெற்ற வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கையாகும். நாம் எல்லோரும் இந்த நிலையை அடைவதற்கே முயல்வோமாக!

எமது சேவாச்சிரமத்தில் நடைபெற்ற
தூய அன்னை சாரதாதேவியின் திருவுருவ
கும்பாபிஷேகத்தை திறம்பட வீடியோ
எடுத்துத்தந்த

**ராஜன் வீடியோ சென்ரர்**

பருத்தித்துறை

**திரு வீடியோ விஷன்**

மூத்தநயினார் கோவிலடி,
கரணவாய், கரவெட்டி.

ஆகியோருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( Continued : Our **Religion**......... )

It was this Vedanta that Swami Vivekananda preached in his lectures in USA, England and India. In a brief utterance he says: " Each soul is potentially divine. The goal is to madifest this Divine within by controlling nature external and internal. "

Physical science needed subtle minds to discover its great truths about matter, especially in the nuclear field. Still more subtle mind is needed to discover the infinite and immortal Atman, present in every human being. Because India had this scientific approach in the world of religion, it could practice tolerance and understanding and see the harmony between various paths to the Divine.

*Ranganathananda*

SWAMI RANGANATHANANDA MAHARAJI 91, is president of the Ramakrishna Mission and Math, a monastic order of over 936 sannyasins and 403 brahmacharins. with 137 branches worldwide.

---

Courtesy! Hinduism Tody May 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தவத்திரு சுவாமி ஜீவனானந்தர் மகராஜ்**
மலரை வெளியிட்டு வைக்கிறார். பெறுபவர்
**திரு. க. கணேசலிங்கம்**
முன்னாள் கொழும்பு மாநகரசபை மேயர்



சிறார்களுக்கு பால்மா வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறார்களுக்கு பால் வழங்குதல்



ஆத்மீகக் கருத்தரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Girl and her glass of milk

I am always inspired by the following thoughtprovoking saying attributed to the great St. Ignatius of Loyola, the founder of the famous Society of Jesus.

" Lord! Teach me to be generous.
Teach me to serve you as you deserve;
to give and not to count the cost
to fight and not to heed the wounds;
to toil and not to seek for rest.
to labour and not to ask for reward
except to know
that I am doing your will "

what a soul - stirring saying that is! In particular that phrase," To give and not to count the cost ,, . This I believe shonld be the guiding , principle ' when we share our wealth or talents or whatever we have or we can afford to, with others. we should give without counting the cost and without expecting anything in return. Give generously and God will reward you abundantly and bless your magnanimous deed. Remember, God loves a cheerful giver!

From the lives of eminent people we learn wonderful lessons. One thing we learn is that they climbed the ladder of success through

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

honest hard work and that most of them' though not very wealthy, had eked out a tough existence in order to survive.

some sold books, newspapers and other items to support themselves financially; others. while studying were engaged in part-time jobs to make ends meet. The goddness of wealth seemed to have not smiled on them when they were young.

There was once a medical student who supported his university studies by selling books. During his spare moments he walked miles in order to satisfy his customers.

With a little margin of profit he was able to see to his financial needs. Often he was disappointed but that did not deter him and he preserved in his endeavours.

One day he went to a house in a farm and knocked at the door. A little girl opend the door and said " Good morning sir, what can I do for you?" " well" , answered the medical student", I have come to sell books; would you be interested in buying one? "

" I am sorry Sir " (said the little girl very politely, "My mother is a widow; we are poor and we can't afford to buy books."

"Oh! It's O.k", said the medical student feeling very sorry for her.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It was rather a hot day and since he was so tired walking all the way to the farm, naturally he was thirsty. So he asked the little girl, "Can I have a glass of water, please?" The girl suggested, "we are farmers and we have some milk at home. Can I offer you a glass of milk Instead?"

"Why not! Thank you so much".

Affter enjoying his glass of milk, he offered to pay for it. "No, thank you," said the little girl. "My mother has taught me to be always kind and polite to strangers. So thank you very much for your offer. God bless you".

The poor little girl's sincerity, hospitality and graciousness touched the medical student immensely.

Years rolled by. One day that little girl, now a grown-up woman was taken seriously ill and was rushed to the hospital in town.

She was very weak and almost too dazed to recognise anyone there. However the medical student, now the head-doctor recognized her as the girl who had given him a glass of milk some years ago. He ordered that she be

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

kept in a private ward and provided the best medical treatment in town. He instructed that she be kept under a round the-clock surveillance.

Everything was done to assure her a speedy recovery. The nurses danced attendance on her and in a matter of days she was completely cured. But when she realized that she had been admitted and treated in a private ward and that the medical bills would be beyond her means, she began to get nervous and unduly worried because she couldn't afford such luxury treatment.

So much so when the bill was brought to her she started sobbing because it was rather exorbitant. But a little postscript at the bottom of the bill cheered her spirit and brought tears of joy. with hands trembling she read through her tears, " You don't need to worry adout this bill; you havealready paid for it with a glass of milk " Dr. Howard A. Kelly

That's how Dr. Howard A.Kelly paid back the graciousness and generosity shown to him years ago by a little farm girl who gave him a free glass of milk. The moral ot the story is, "Give, without counting the cost.';

**Daily News 2/4/99** **Brother Baptist Croos**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org